

History of Christianity in India

கிபி 52 முதல் 17 ம் நூற்றாண்டு வரை இந்தியாவில் கிறிஸ்தவம்...



Presented by
Rev. D. David
Lesson: 6
Part – One



முன்னுரை : முதல் நூற்றாண்டு





- <u>இந்தியா</u>: இந்தியாவின் எல்லையானது மூன்று பக்கங்களிலும் கடலால் சூழந்து, வடக்கில் உயரமான இமயமலையை கொண்டுள்ளது. இந்நிலையில் கைபர் மற்றும் போலன் கணவாய்கள் மூலமாமகவே வெளி உலகத்தோடு தொடர்புகொள்ளும் இயற்கை சூழ்நிலையில் இருந்தது.
- <u>இந்தியாவில் ஆரியர்கள்</u>: இந்தியாவிற்குள் கி.மு 1500த்தில் ஆரியர்கள், கிமு 4 ஆம் நூற்றாண்டில் கிரேக்கர்கள், கி.பி 1 ஆம் நூற்றாண்டில் குசானர்கள் (Khusans), கி.பி 5 ஆம் நூற்றாண்டில் ஹன்ஸ் (Huns) மற்றும் கி.பி 12 ஆம் நூற்றாண்டில் முஸ்லிம்களும், 16 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பியர்களும் இந்தியா வந்து தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டினார்கள்.
- <u>உலக வர்த்தகங்கள்</u>: இந்தியாவில் இருந்து எகிப்து, ரோமாபுரி, சிரியா, அரேபியா, பெர்சியர்கள் (ஈரான்) போன்ற நாடுகளோடு கடல் வர்த்தகம் சிறப்பாக இருந்தது. இந்தியாவில் இருந்து பருத்தி, பட்டு துணி, மசாலா, அவுரி இலை, சர்க்கரை, மருந்துகள், ரத்தின கற்கள் மற்றும் அறியவகை கலைப் பொருட்கள் ஏற்றுமதியால் பொருளாதாரம் சிறந்திருந்தது.
- <u>மத சகிப்புத்தன்மை</u>: இந்தியாவிற்கும் பிற நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகம் முலமாக மத ரீதியாக, கலாச்சார ரீதியாக சமூக ரீதியாக அநேக காரியங்களை உள்வாங்கவும், பங்களிக்கவும் வழிவகுத்தது. இந்தியாவில் ஆட்சி செய்த மன்னர்கள் தங்கள் மத நம்பிக்கைகளை, ஒருபோதும் மக்கள் மீது திணிக்கவில்லை. அக்கால மக்கள், மத ரீதியான காரியங்களில் திறந்த மனதோடு இருந்து, ஒருவருக்கொருவர் கற்றுக்கொள்ள தயாராக இருந்தார்கள். பல்வேறு மத அறிஞர்களிடையே சிறந்த கருத்துப்பரிமாற்றங்கள், கலந்துரையாடல்கள் மற்றும் விவாதங்கள் பண்டைய இந்தியாவின் இயல்பன அம்சமாகும். இந்த சூழ்நிலையில்தான் கிறிஸ்தவம் இந்தியாவுக்கு வந்தது.

இந்தியாவிற்குள் கிறிஸ்தவம்

- <u>தமிழகத்தின் சமூக-கலாச்சார மற்றும் அரசியல் பின்னணி</u>: இந்தியாவின் முதல் நூற்றாண்டில் தென்னிந்தியா பகுதிகளை சேரர்கள், சோழர்கள் மற்றும் பாண்டியர்கள் ஆட்சி செய்து வந்தார்கள். இதில் கிரங்கனூர் துறைமுகம் *(Muzirius)*, தமிழ்நாட்டின் சேர வம்சத்தின் கட்டுப்பாட்டில் இருந்தது.

- <u>கிறிஸ்தவ பாரம்பரியம்</u>: இந்தியாவில் கிறிஸ்தவத்தின் தோற்றம், துரதிர்ஷ்டவசமாக மர்மங்களால் *(Mystery)* நிறைந்து கானப்படுகிறது. கிறிஸ்தவத்தின் ஆரம்பகால வரலாறு குறித்ததான ஆவணங்கள் மிகக் குறைவாகவே கானப்படு கிறதால் பாரம்பரியங்களையே நம்பி இருக்கவேண்டியுள்ளது.

- <u>இந்தியாவில் கிறித்துவத்தின் ஆரம்பம்</u>: இந்தியாவிற்கு கிறிஸ்தவம் வந்தது பற்றி இரண்டு கருத்துக்கள் கானப்படுகின்றன. இதில் பிரபலமாக கி.பி *52* இல் அப்போஸ்தலர் தோமா மூலமாக கிறித்துவம் இந்தியாவுக்கு வந்தது. இண்டாவது கிபி *345* ல் சிரியா நாட்டிலிருந்து கேரளாவிற்கு குடிபெயர்ந்த கிறிஸ்தவர்கள் மூலமாக கிறிஸ்தவம் வந்தது என்று கூறப்படுகிறது.

- <u>கேரளாவில் யூதர்கள்</u>: கிமு *10*ஆம் நூற்றாண்டு முதல் யூதர்கள், கேரளாவின் மலபார் பகுதிகளில் சுமார் *10,000* க்கும் மேற்பட்ட யூதர்கள் கிரங்கனூர், கொச்சி, கோழிக்கோடு பகுதிகளில் ஜெப ஆலயங்கள் யூத குடியிருப்பு பகுதிகளும் இருந்தன.

- <u>இந்தியாவில் தோமா</u>: இந்தியாவில் கிறிஸ்துவின் நற்செய்தியை பரப்புவதற்காக அப்போஸ்தலரான தோமா கி.பி *52* இல் கேரளாவில் கிரங்கனூருக்கு வந்து, யூதர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவித்ததினால் பலர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு கிறிஸ்தவர்களாக மாறினார்கள். இப்படியாக கிறிஸ்தவம் இந்தியாவிற்குள் வந்தது.

அப்போஸ்தலனாகிய பர்தொலொமேயு பாரம்பரியம்





- *1).இந்தியாவில் பர்தொலொமேயு: அப்போஸ்தலராகிய தோமா இந்தியா வருவதற்கு முன்பாகவே பர்த்தொலொமேயு நற்செய்தி பரப்புவதற்காக இந்தியாவில் பம்பாய்க்கு அருகேயுள்ள கொங்கன் கடற்கரை பகுதியில் அமைந்துள்ள கல்யாண் பகுதியில் வசித்துவந்த யூதர்களுக்கு நற்செய்தியை அறிவித்ததாக பராம்பரிய செய்திகள் கூறுகிறது. அப்படியே யூதர்கள் அல்லாதோர்க்கும் நற்செய்தியை அறிவித்ததில் இந்த பகுதி மன்னர் Polymius என்பவர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதால் கல்யாணில் புகழ்பெற்று விளங்கிய அஸ்ட்ராத்தின் (Astrauth) சிலையை அகற்ற உத்தரவிட்டதோடு, கிறிஸ்தவ திருச்சபைகளை உண்டாக்கவும் செய்தார். தொடர்ந்து சில ஆண்டுகள் பர்தொலொமேயு கல்யாண் பகுதியில் நற்செய்திபணி அறிவித்து, திருச்சபைகளை ஏற்படுத்தியும், இதை தொடர்ந்து வழிநடத்த போதகர்களை நியமித்தும், அவர்களை கிறிஸ்து இயேசுவுக்குள் விசுவாசத்தில் வழிநடத்த, மத்தேயு என்பவர் எபிரேய மொழியில் எழுதிய புதிய ஏற்பாட்டு நற்செய்தி புத்தகத்தை கொடுத்துவிட்டு, பின்னர் பர்தொலொமேயு, பெர்சியா நாட்டிற்கு நற்செய்திபணி அறிவிக்க சென்று அங்கு இரத்த சாட்சியாக மரித்தார். அவரது உடல் Tabris (ஈராக்) துறவியர் மடத்தில் அடக்கம் செய்யப்பட்டது.*
- *2).யூசிபியஸின் சாட்சி(: கிபி 314ல் வாழ்ந்த கிறிஸ்தவ வரலாற்று ஆசிரியர் யூசிபியஸ் (Eusebius of Caesaria) கூறுவது என்னவென்றால், மிஷனெரியான பந்தேயுஸ் (Pantaenus of Alexandria) என்பவர் கிபி 190ல் கிறிஸ்துவின் நற்செய்தியை பரப்புவதற்காக இந்தியாவுக்குச் சென்றார் என்றும், அங்கே இயேசு கிறிஸ்துவின் சீடர்களில் ஒருவரான மத்தேயுவினால் எபிரேய மொழியில் எழுதப்பட்ட நற்செய்தி புத்தகத்தை, அப்போஸ்தலராகிய பர்தொலொமேயு விட்டுச்சென்றதாகவும், அதை பாந்தேயுஸ் அலெக்சாந்திரியாவுக்கு எடுத்துச் சென்றதாகவும் தன்னுடைய புத்தகத்தில் எழுதியுள்ளார்.*

அப்போஸ்தலனாகிய பர்தொலொமேயு பாரம்பரியம்



- *3).புனித ஜெரோம் சாட்சி: கிபி 384 ல் புனித ஜெரோம் என்பவரும் தன்னுடைய புத்தகத்தில் Demettrius bishop of Alexandria என்பவர் நற்செய்தி பரப்புவதற்காக கிறிஸ்தவ மிஷனெரியான பந்தேயுஸ் என்பவர் மூலமாக இந்தியாவிலிருந்து அலெக்சாந்திரியாவிற்கு கொண்டுவரப்பட்ட எபிரேயத்தில் எழுதப்பட்ட மத்தேயு நற்செய்தி புத்தகத்தை பற்றி குறிப்பிடுகிறார்.*

- *4).காஸ்மோஸ் சாட்சி: கிபி 520-525 வரை இந்தியாவிற்கு சென்ற Cosmos என்ற சரித்திர ஆசிரியர் தன்னுடைய புத்தகத்தில் (Christian Topography) இந்தியாவில் கொங்கன் பகுதியில் கல்யாண் என்ற இடத்தில் அதிகமாக கிறிஸ்தவர்கள் இருந்ததால் அங்கிருந்த திருச்சபைகளை வழிநடத்த கி.பி 345 ல் பெர்சியாவிலிருந்து ஒரு பேராயர் அனுப்பப்பட்டார் என்றும் குறிப்பிட்டுள்ளார்.*

- *5).முடிவுரை: இந்தியாவில் கொங்கன் பகுதியில் கல்யாணில் யூத குடியிருப்பு பகுதிகள் அதிகமாக இருந்ததால், கிறிஸ்துவின் நற்செய்தியை பரப்புவதற்கு, அப்போஸ்தலர் பர்தொலொமேயு வந்ததற்கு சாத்திய கூறுகள் இருக்கிறது. போர்த்துகீசியர்கள் இந்தியா வரும் வரை, பர்தொலொமேயு வழி கிறிஸ்தவர்கள், தனி சமூகமாக கிபி 15 ம் நூற்றாண்டுவரை வாழ்ந்து வந்தார்கள். பின்னர் இவர்கள் பம்பாய் வந்த போர்த்துகீசிய கிறிஸ்தவர்களுடன் இணைக்கப்பட்டார்கள்.*

- *அப்போஸ்தலர் தோமா: இயேசுவின் சீஷரான தோமா கி.பி 52இல் பாலஸ்தீனத்திலிருந்து செங்கடல் வழியாக, பாரசீக வளைகுடாவில் பயணம் செய்து இறுதியில் கேரளாவின் பெரிய துறைமுகமான கிரங்கனூரில் வந்து இறங்கினார்.*

அப்போஸ்தலர் தோமா பற்றிய பாரம்பரியம்



- <u>மூன்று பாரம்பரியங்கள்</u>: தோமாவின் நற்செய்திபணி பற்றி நமக்கு நிறுபிக்கமுடியாத மூன்று பாரம்பரிய கருத்துக்கள் இருக்கின்றன. அவைகளில் கேரளாவின் மலபார் பாரம்பரியம், வட இந்தியாவின் மேற்கத்திய பாரம்பரியம் மற்றும் தமிழகத்தின் மைலாப்பூர் பாரம்பரியம் ஆகும்.

- <u>மலபார் பாரம்பரியம்</u>: கிபி 52 ல் கிரங்கனூர் வந்துசேர்ந்த தோமா சுமார் 5 ஆண்டுகள் கேரளாவில் தங்கி இருந்து யூதர்களிடமும் உயர் சாதி இந்து குடும்பங்களுக்கும் நற்செய்தி அறிவித்ததில் அநேகர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டார்கள். ஆகவே அங்கு மலியங்காரா, பழையூர், பாரூர், கோக்காம்பலம், நீரணம், செய்யூர், மற்றும் கொச்சி பகுதிகளில் ஏழு திருச்சபைகளை நிறுவி, அதற்க்கு போதகர்களை நியமித்தார். பின்னர் கிபி 57 ல் கிறிஸ்தவத்தை பரப்புவதற்காக மலேசியா, சீனா, பார்த்தியா (ஆப்கானிஸ்தான்) நாடுகளுக்கு நற்செய்தி அறிவிக்க கடந்து சென்றார். இந்நிலையில் கிபி 63 ல் திருவாங்கூர் சமஸ்தானத்தில் கன்னியாகுமரி அருகே சின்னமுட்டம் என்ற துறைமுகத்தில் இறங்கி, அரப்பள்ளியில் கருங்கல்லில் செய்யப்பட்ட ஆலயத்தை நிறுவி, தான் உருவாக்கிய எல்லா திருச்சபைகளை பார்வையிட்டு, மைலாப்பூர் சென்றார். இறுதியில் கிபி 72ல் சென்னையின் மைலாப்பூரில் இரத்தசாட்சியாக அடக்கம் பண்ணப்பட்டார்.

- <u>மலபார் பாரம்பரியத்திற்கான சாட்சி</u>: தோமா பற்றிய இந்த பாரம்பரியத்தின் சில விபரங்களை மலையாள மொழியில் ரம்பன் தொம்ம பாட்டு, வீரடையன் பாட்டு, மற்றும் மார்க்கம் களியல் பாட்டு போன்றவற்றில் காணலாம். இந்த பாடல்கள் வாய்மொழியாக, அடுத்தடுத்த தலைமுறைகளுக்கு அறிவிக்கப்பட்டு இன்றுவரை மலபார் கிறிஸ்தவர்களால் தொடர்ந்து பாடப்பட்டுவருகிறது.

தோமா பற்றிய
மேற்கத்திய பாரம்பரியம்



- *<u>1).மேற்கத்திய பாரம்பரியம்</u>: இந்த பாரம்பரியம் கிபி 3 ஆம் நூற்றாண்டின் எழுதப்பட்ட தோமாவின் நடபடிகள் (Acts of Thomas) என்ற புதிய ஏற்பாட்டு தள்ளுபடி ஆகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.*
- *<u>2).தோமாவின் நடபடிகள்</u>: இயேசு கிறிஸ்து பரமேறிய பின்பு ஆதி அப்போஸ்தலர்கள் ஒவ்வொருவரும் நற்செய்திபணி அறிவிக்க தோமாவிடம் இந்தியா செல்லவேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டது. இதற்கிடையே வட இந்தியா மன்னர் கொண்டபோரஸ் (Kabul, Indo-Parthian) என்பவரிடம் அமைச்சராக பணியாற்றிய அப்பானீஸ் (Abbanes) என்பவர், புதிய அரண்மனை கட்டுவதற்கு சிறந்த கட்டடகலை நிபுணரை தேர்வு செய்வதற்காக பாலஸ்தீனா வந்திருந்தார். இவர் எதிர்பாராதவிதமாக தோமாவைக் கண்டுபிடித்து, அவரை இந்தியாவுக்கு அழைத்து வந்தார்.*
- *<u>3).இந்தியாவில் தோமா</u>: கொண்டபோரஸ் மன்னர் தோமாவிடம் புதிய அரண்மனை கட்டும் திட்டத்தை எடுத்துரைத்து தேவையான பணத்தை அரசாங்க கருவூலத்தில் பெற்றுக்கொள்ள உத்தரவிட்டார். ஆனால் பணத்தை பெற்றுக்கொண்ட தோமா, நற்செய்தி பணியை செய்துகொண்டே ஏழை, எளியவர்களுக்கு உதவிசெய்வதற்காக பணத்தை செலவுசெய்துகொண்டு இருந்தார். இந்நிலையில் ஆறுமாதங்கள் கழித்து மன்னர் அரண்மனையின் கட்டுமானத்தை காண வந்தார். அப்போது தோமா பணத்தைக்கொண்டு அரண்மனை கட்டாமல், அதை ஏழைகளுக்காக செலவழித்ததைக் கண்டார். ஆகவே கடும்கோபம் கொண்டு தோமாவை சிறையில் அடைத்தார்.*

தோமா பற்றிய மேற்கத்திய பாரம்பரியம்



- *4).மன்னரின் மனமாறுதல்:* கொண்டபோரஸின் சகோதரர்களில் ஒருவரான காட் *(Gad)* என்பவர் நோய்வாய்ப்பட்டு, மரித்துப்போகும் தருவாயில் இருந்த போது, தோமாவிடம் பிராத்தனை செய்யும்படி கேட்டுக்கொண்டார். ஆகவே ஜெபிக்கும்படி தோமா வருகின்றார். அப்போது மன்னரின் சகோதரர் மரித்துப்போகிறார். ஆயினும் ஊக்கமாக தோமா ஜெபித்ததினால், அவருடைய உயிர் திரும்ப வந்தது. இப்போது மன்னரின் சகோதரன் பரலோகத்தில் கொண்டபோரஸ் மன்னருக்காக தோமா கட்டிக்கொண்டிருந்த அரண்மனையைப்பற்றி மன்னரிடம் கூறுகின்றார். இதைக்கேட்ட மன்னரும் அவரது சகோதரர் இருவர் குடும்பத்தாரும் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டார்கள்.
- *5).இரத்த சாட்சி:* அப்போஸ்தலர் தோமா தொடர்ந்து கொண்டபோரஸ் ஆட்சிசெய்த பகுதிகளில் நற்செய்தி அறிவித்ததினால் அநேகர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டார்கள். இந்நிலையில் மற்றொரு மன்னர் மஸ்டாய் *(Mazdai)* தன்னுடைய ஆலோசனை அதிகாரியின் *(Personal Secretory)* மனைவி மற்றும் மகளுக்கு பிடித்திருந்த அசுத்த ஆவியை விரட்டும்படி வருந்தி கேட்டுக்கொண்டதால் அந்த சமஸ்தானத்திற்கு சென்ற தோமா, அவர்களை குணமாக்குகின்றார். இதன் விளைவாக மன்னர் மற்றும் அவருடைய அதிகாரி குடும்பத்தார் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்கின்றார்கள். அப்படியே தோமா அங்கு நற்செய்தியை பரப்பியதால் அநேகர் இயேசுவை ஏற்றுக்கொண்டார்கள். இதை பொறுத்துக்கொள்ள முடியாத உயர்சாதி பூசாரிகள் மன்னரின் சகோதரனிடம் தோமா எல்லோரையும் மதம்மாற்றிக்கொண்டு இருக்கிறார் இது தெய்வகுற்றமாகிவிடும் என்று கூறியதால் அவர் கோபம்கொண்டு தோமாவை கொல்லும்படி உத்தரவிட்டதில், தோமா இரத்தசாட்சியாக மரித்தார் என்று கூறப்பட்டுள்ளது.

தோமா பற்றிய மைலாப்பூர் பாரம்பரியம்



- *<u>6).மைலாப்பூர் பாரம்பரியம்</u>: இது போர்த்துகீசிய பதிவுகளை அடிப்படையாகக் கொண்டது. தோமா, கேரளாவில் நற்செய்தியை அறிவித்துவிட்டு கிபி 62 ல், தமிழ்நாட்டில் கோரமண்டல் கடற்கரைக்குச் சென்று நற்செய்தியை பரப்புவதற்காக சென்னை சின்ன மலையில் (Little Mount) உள்ள குகையில் தங்குமிடத்தை அமைத்தார். தோமா அறிவித்த நற்செய்தியினால் அநேகர் கிறிஸ்தவர்களாக மாறினார்கள். ஆகவே உயர்சாதி பூசாரிகள் தோமாவை கொல்வதற்காக சதித்திட்டம் தீட்டினார்கள்.*

- *<u>7).இரத்த சாட்சி</u>: தோமாவை கொலைசெய்வதற்காக விஷமிகள் முயன்றபொழுது, சின்னமலைக்கு அருகிலுள்ள ஒரு குகையில் தஞ்சம் புகுந்தாரஅங்கிருந்த குகையின் கூரையின் துளை வழியாக தப்பிச்சென்று தான் கட்டிய பரங்கி மலையின் திருச்சபையில் (St. Thomas Mount) தஞ்சம் புகுந்து அங்கிருந்த கல் சிலுவையை உறுதியாய் பற்றிக்கொண்டிருந்தபோது, அவரை ஈட்டியால் குத்தி, கூர்மையான ஆயுதங்களை கொண்டு கொலை செய்தார்கள். பின்னர் தோமாவின் சீடர்கள் அவரது சரீரத்தை சென்னையின் மைலாப்பூரில் உள்ள கடற்கரையில் அடக்கம் செய்தனர்.*

- *<u>8).தோமாவின் கல்லரைக்கு சாட்சி</u>: மைலாப்பூரில் இருந்த தோமாவின் கல்லரையைக் குறித்து, கிறிஸ்தவ துறவியான பிராங்கிஸ் (Frankish) என்பவர் சாட்சி அளித்ததாக கி.பி 594 இல் தூய கிரிகோரி (St. Gregory of Tours) தன்னுடைய புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார். கேரளாவில் கிளியூர் பகுதியில் அகழ்வாராய்ச்சி மூலம் கிடைக்கப்பெற்ற கல் சிலுவை மற்றும் தோமா மூலம் கிறிஸ்தவரான மன்னரின் உருவம் பதித்த நாணயங்களும் (effigies of a king) முக்கியமான சான்றுகள் ஆகும். இந்நிலையில் மைலாப்பூரில் இருந்த தோமாவின் கல்லரைக்கு மலபார், மேற்கு ஆசியா, மற்றும் சீனாவிலிருந்தும் கிறிஸ்தவர்கள் வந்து நினைவஞ்சலி செலுத்துகின்றார்கள் என்று மைலாப்பூர் பாரம்பரியம் கூறுகிறது.*

தோமா பற்றிய முடிவுரை



- *<u>சிக்கல்கள்</u>: தோமா பற்றிய பாரம்பரியங்களை நிருபிப்பதற்கு நம்மிடம் சமகால இலக்கிய பதிவுகள் எதுவும் இல்லை. ஆனால் கிபி 3 ம் நூற்றாண்டு முதல், கிறிஸ்தவ வரலாற்று ஆசிரியர்கலால் சிறிதளவு குறிப்புகளைக் மட்டுமே கொடுக்க முடிந்தது. இந்தியாவுக்கு வெளியே இருந்து ஆதிதிருச்சபை தந்தையர்கள் (Early Church Fathers) மூலம், தோமா பற்றி கிடைத்த தகவல்கள், இந்த பாரம்பரியங்களை நிருபிப்பதற்கு போதுமானதாக இல்லை.*

- *<u>கல்லறையை தோண்டுதல்</u>: பல நூற்றாண்டுகளாக மைலாப்பூரில் உள்ள தோமாவின் கல்லறை இருந்தது என்று கூறப்படுகிறது. ஆனால் கிபி 1523 ஆம் ஆண்டில், போர்த்துகீசியர்கள் அகழ்வாராய்சிக்காக கல்லறையைத் தோண்டியபோது, கல்லறை அமைக்கப்பட்ட திசையானது, வழக்கமான கிறிஸ்தவ முறைமைப் படி இல்லை. ஆகவே இது தோமாவின் கல்லறையா? அல்லது வேரோருவருடையதா? என்று கேள்விகள் எழுப்பப் பட்டது. சில வரலாற்று ஆசிரியர்கள், பாரம்பரிய செய்திகளை நிராகரித்து தோமா இந்தியாவுக்கு வரவில்லை என்று கூறுகின்றார்கள்.*

- *<u>முடிவுரை</u>: கேரளாவில் யூதர்கள் அதிக அளவில்வாழ்ந்து வந்ததை பார்க்கும்போது, தோமா, கேரளாவுக்கு வந்திருப்பதற்கு அதிக வாய்ப்புகள் இருக்கின்றது. ஆனால் தோமா தென்னிந்தியாவுக்கு வராமல், வட இந்தியாவுக்கு சென்றார் என்று சில வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றார்கள், ஆனால் சிலர் வட இந்தியாவிற்கும் தென் இந்தியாவுக்கும் தனித்தனியாக தோமா பயணம் சென்றிருக்கலாம் என்றும் கருதுகின்றனர். இதற்கிடையே தோமா இந்தியாவுக்கு வந்ததுபற்றி உள்ளூர் பாரம்பரியங்களின் செய்திகள் மிகவும் வலுவாக இருக்கின்றன. வேறு எந்த நாட்டிலும் தோமா கல்லறை இருப்பதாக செய்திகள் இல்லை. ஆகவே, பாரம்பரிய செய்திகளின் அடிப்படையில், தென்னிந்தியா வந்து தோமா நற்செய்தியைப் பரப்பினார் என்பதற்கு அதிக சாத்தியம் உண்டு.*

தோமா வழி கிறிஸ்தவர்களின் தொலைந்துபோன வரலாறு (72 -345AD)



- <u>சான்றுகள் இல்லாமை</u>: முதல் நூற்றாண்டிலேயே கிறிஸ்தவம் இந்தியாவுக்கு வந்தது என்று பொதுவாக ஆனால் இதற்கான முதன்மை சான்றுகள் (Primary Evidence) இல்லாததால், தோமா பற்றிய கிறிஸ்தவர்களின் வரலாற்றை (கி.பி 72-345) முன்வைக்க முடியவில்லை. இந்திய திருச்சபை சரித்திரம் பற்றி, இந்தியாவிற்கு வெளியேயுள்ள நாடுகளில் ஒரு சில இலக்கிய குறிப்புகளும், வரலாற்று நினைவுச் சின்னங்கள், கல்வெட்டுகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளது.
- <u>இந்திய வரலாற்று ஆசிரியர்கள்</u>: பண்டைய இந்தியா சிறந்த தத்துவ ஞானிகளையும், விஞ்ஞானிகளையும், பொருளாதார வல்லுனர்களையும் உருவாக்கியுள்ளது, ஆனால் ஒரு வரலாற்று ஆசிரியரைகூட பெற்றெடுக்கவில்லை. தோமாவின் காலத்தை தொடர்ந்து, முதல் மூன்று நூற்றாண்டுகள், தோமாவை பின்பற்றிய கிறிஸ்தவ குடும்பங்கள் எத்தனை இருந்தது என்று நமக்கு தெரியவில்லை.
- <u>இது ஊகமா? (speculation) அல்லது உண்மையா? (True):</u> தமிழ்நாட்டில் சென்னையில் வாழ்கின்ற தமிழ் புலவர் தெய்வநாயகம் தலைமையில் செயல்படுகின்ற இயக்கமானது திருக்குறள், சைவ சித்தாந்தம், பிரம்ம சூத்ரம் போன்ற தமிழ் இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு, இந்தியாவில் கிபி 5ம் நூற்றாண்டில் தோன்றிய சைவம், வைணவ சமயங்கள் எல்லாமே தோமா வழி திராவிட கிறிஸ்தவம் என்று அறுதியிட்டு கூறுகின்றனர். இது உண்மையா, மிகைப் படுத்தப்பட்ட செய்தியா? அல்லது ஊகமா? என்று தெரிய வில்லை. தமிழ் இலக்கியத்தில் புலமை பெற்ற தமிழ் புலவர்களும், சமஸ்கிருதத்தில் புலமை பெற்றவர்களும், கிறிஸ்தவ இறையியலில் புலமைத்துவம் பெற்றவர்கள் மட்டுமே உண்மையா அல்லது ஊகமா என்று கூறமுடியும்.

மைலாப்பூர் கிறிஸ்தவர்களின் வெளியேற்றம்







- <u>துன்புறுத்தல்</u>: அப்போஸ்தலர் தோமாவின் மரணத்திற்கு பின்னர், அவருடைய வழியில் கிறிஸ்தவர்களானவர்கள் காலப்போக்கில் உயர்சாதி பூசாரிகளின் தூண்டுதலின் பேரில் ஆட்சியாளர்கள் மூலம் அழிவை சந்தித்தார்கள். தோமாவழி கிறிஸ்தவர்கள் மீது ஏவப்பட்ட வன்முறைகள், துன்புறுத்தல், அடக்குமுறை போன்றவற்றால் வாழ்வாதாரங்கள் எல்லாம் அழிக்கப்பட்டது.
- <u>மைலாப்பூர் வெளியேற்றம் (Mylapore Exodus)</u>: தோமாவழி கிறிஸ்தவர்கள் சுமார் 160 குடும்பங்கள் மைலாப்பூரை விட்டு வெளியேறி, கேரளாவின் மலபார் பகுதியில் தஞ்சம் புகுந்தார்கள். இவர்களுக்கு எருசலேம் அல்லது அந்தியோகியா திருச்சபை மூலம் எந்த ஒரு ஆயர்களும், பேராயர்களும் அனுப்பப்படாததினால் அவர்கள் கிறிஸ்துவ விசுவாசத்தை இழந்து, காலப்போக்கில் தங்கள் அடையாளத்தையே இழந்து போனார்கள்.
- <u>மலபாருக்கு வந்த மைலாப்பூர் கிறிஸ்தவர்கள்</u>: மைலாப்பூர் தோமாவழி கிறிஸ்தவர்கள், கேரளாவில் உள்ள கிராங்கனூர் மற்றும் கொச்சியில் குடியேறியவர்களை தோமாவழி மலபார் கிறிஸ்தவர்கள் அன்போடு ஏற்றுக்கொண்டார்கள். இதனால் மலபார் கிறிஸ்தவம்வேகமாக வளர்ச்சியடைய ஆரம்பித்தது.
- <u>ஆதாரங்கள்</u>: கி.பி 293 ஆம் ஆண்டில், காவேரி பூம்பட்டணத்தில் (காவிரி ஆற்றின் கரைகள்) கிறித்துவ மதத்திற்கு மாறியவர்களை, உயர்சாதி பூசாரிகளின் தூண்டுதலின்பேரில் அங்கிருந்த மன்னரால் துன்புறுத்தியதால் அங்கிருந்த 72 கிறிஸ்தவ குடும்பங்கள் தங்கள் வாழ்வாதாரங்களை இழந்தவர்களாக கொச்சி பகுதியில் குடியேறினார்கள். இருப்பினும் கிபி 315 ஆம் ஆண்டில் மாணிக்க வச்சக்ர் (Manikka Vachakr), கொச்சிக்கு குடிபெயர்ந்தவர்களை மீண்டும் உயர்சாதி மக்களுக்கு அடிமைகளாக வேலைசெய்ய கொண்டுவந்தார். மைலாப்பூர் கிறிஸ்தவர்களின் வெளியேற்றத்தை போர்த்துக்கீசிய அறிக்கைகள் உறுதிப்படுத்துகின்றன.

சிரியன் கிறிஸ்தவர்களின் முதல் குடியேற்றம் (கி.பி 345)



- <u>மலபார் கிறிஸ்தவர்கள்</u>: தோமாவின் மரணத்திற்குப் பிறகு மலபார் திருச்சபையை வழிநடத்துவதற்கு எருசலேமில் இருந்தோ அல்லது அந்தியோகியாவில் இருந்து ஆயர்களோ அல்லது பேராயர்களோ அனுப்பப்படவில்லை. ஏனெனில் பாலஸ்தீனத்தில் கிறிஸ்தவ திருச்சபைகள், ரோம பேரரசு மூலமாக கடுமையான போராட்டங்களை சந்தித்தது.
- <u>பெர்சியாவில் கிறிஸ்தவ துன்புறுத்தல்</u>: கிபி 4 ஆம் நூற்றாண்டில் ரோம பேரசு கிறிஸ்தவத்தை அங்கிகரித் ததினால் பெர்சிய ஆட்சியாளர்கள், தங்கள் நாட்டில் குடியிருந்த கிறிஸ்தவர்கள், ரோம பேரரசிற்கு ஆதரவாய் இருப்பார்கள் என்று சந்தேகப்பட்டார்கள். ஏனெனில் ரோம பேரரசுக்கும் பெர்சிய பேரரசுக்கும் பகைமை இருந்து வந்தது. இந்நிலையில் பெர்சியாவில் சப்பார் II (Sapor II - 310-379 கிபி) ஆட்சியின்கீழ் கிறிஸ்தவர்களுக்கு எதிராக மிகப்பெரிய தாக்குதலை நடத்தியதில் சுமார் 16,000 கிறிஸ்தவர்கள் கொல்லப்பட்டார்கள்.
- <u>கானாவின் தோமா (Thomas of Cana)</u>: கி.பி 345 இல் பெர்சியாவில் கிறிஸ்தவர்களுக்கு எதிராக நடத்திய தாக்குதலில் இருந்து தப்பிக்க, பெரிய செல்வந்தரான கானாவின் தோமா (Thomas of Cans) தலைமையில் எருசலேம், பாக்தாத் மற்றும் நினிவே பகுதிகளை சேர்ந்த சுமார் 400 குடும்பங்கள் கேரளாவில் இருக்கும் கிராங்கனூருக்கு வந்து சேர்ந்தார்கள். இவர்களை மன்னர் சேரமான் பெருமாள் ஏற்றுக்கொண்டார்கள்.
- <u>இந்தியாவில் சிரியன் கிறிஸ்தவம்</u>: கானாவின் தோமா, தன்னோடு ஒரு சிரியன் பேராயர் மற்றும் 4 ஆயர்கள், மேலும் சில டீக்கன்களையும் அழைத்து வந்திருந்தார். இந்நிலையில் சிரியன் திருச்சபையின் ஆராதனை முறைமைகளையும், பாரம்பரியங்களையும் தோமாவழி கிறிஸ்தவர்கள் ஏற்றுக்

தோமா வழி கிறிஸ்தவர்களுக்கு கேரளாவில் சலுகைகள்

Chera Emperor issuing Copper Grants to Yemani Jewish leader Joseph Rabban(750 AD)

Copper-plate Inscription

- <u>கானாவின் தோமா செல்வாக்கு</u>: சிரியாவில் இருந்துவந்த செல்வந்தரான கானாவின் தோமா, கிராங்கனூர் மன்னருக்கு அநேக பரிசுகளை வழங்கினார், மேலும் தன்னோடுவந்த கிறிஸ்தவர்கள் தங்கியிருந்து தொழில் செய்ய தேவையான நிலத்தை கொடுக்கும்படி கேட்டுக்கொண்டதால் சேரமான் பெருமாள் மன்னர் அவர்களின் அனைத்து கோரிக்கைகளையும் ஏற்றுக்கொண்டு பல சலுகைககளை கொடுத்தார். இவையாவும் தாமிர தட்டுகளில் (Copper Plate) எழுதி, அரசாங்க முத்திரையோடு அத்தாட்சியாக கொடுக்கப்பட்டது.
- <u>தாமிர தட்டு சாசனம்</u>: இது அரங்க ஆட்சியாளர்களால் வழங்கப்பட்ட ஆணைகள் தாமிர தட்டுகளில் எழுதப்பட்டது. இது அரசாங்கத்தின் சிறப்பு மானியங்கள், அதிகாரங்கள் மற்றும் சொத்து உரிமைகளுக்கு உத்தரவாதமாக இருந்தன. இதன் மூலமாக கேரளாவில் யூதர்களைப்போல, மலபார் கிறிஸ்தவர்களும் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் அமைப்பில் உயர்ந்த நிலையை அடைந்தார்கள். காலபோக்கில் சிரியாவிலிருந்து வந்த கிறிஸ்தவர்கள், மலபார் கிறிஸ்தர்களோடு சம்பந்தம் கலந்ததால் எல்லோருமே தோமாவழி கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்பட்டார்கள்.
- <u>சலுகைகள்</u>: தோமாவழி கிறிஸ்தவர்களுக்கு அரசாங்கத்தின் மூலம் 72 வகையான சலுகைகள் தாமிர தகடுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. முக்கியமாக ஏற்றுமதி, இறக்குமதி வரிவிலக்கு, சமுதாய மற்றும் மத வரிகள் விதிவிலக்கு, ஒடுக்கப்பட்ட சமூகத்தினர்மீதான அதிகாரம், திருச்சபைக்கு வரிவிலக்கு, ஆயர்கள் மற்றும் பேராயர்களுக்கு அரசாங்க சலுகைகள் போன்றவை கொடுக்கப்பட்டிருந்தது. ஆயர்களும் பேராயர்களும் இராணுவ-அரசியல் தலைவர்களைப் போல அதிகாரம் கொண்டவர்களாக இருந்தார்கள்.

இந்திய மற்றும் பெர்சிய திருச்சபைகளின் இணைப்பு



- *<u>மலபார் தோமாவழி திருச்சபையின் நிலை</u>: மலபார் தோமாவழி கிறிஸ்தவர்கள், சிறுபான்மை சமூகமாகவே இருந்தார்கள். மேலும் மலபார் தோமாவழி திருச்சபைகளுக்கு என்று பொதுவான திருச்சபை நிர்வாக அமைப்புகள் ஏற்படுத்தப்படவில்லை. ஆனால் எல்லா கிறிஸ்தவர்களின் கதவுகளிலும், வீட்டு சுவர்களிலும் சிலுவைகளை அடையாளமாக வைத்திருந்து, குழந்தைகளுக்கு வேதாகம பெயர்களை வைக்கும் பழக்கம் இருந்து வந்தது. ஆயினும் மேய்ப்பன் இல்லாத ஆடுகளைப்போலவே தோமாவழி கிறிஸ்தவர்கள் வாழ்ந்துகொண்டு இருந்தார்கள்.*

- *<u>இந்தியாவில் சிரியன் கிறிஸ்தவர்கள்</u>: கிபி 345 இல் இந்தியாவுக்கு வந்த கானாவின் தோமா மூலமாக, கிழக்கு தேச சிரியன் திருச்சபையானது (Sastern Syrian Church) இந்திய திருச்சபைகளுடன் நேரடி தொடர்பு ஏற்பட்டது. சிரிய கிறிஸ்தவர்களின் வருகையினால் மலபார் தோமாவழி திருச்சபைகள் புத்துயிர் பெற்றது. சீரிய கிறிஸ்தவர்களும், தோமாவழி கிறிஸ்தவர்களைப்போல உயர் சாதியினர் என்ற அந்தஸ்தை பெற்றார்கள். காலப்போக்கில், தோமா வழி கிறிஸ்தவர்கள், முழுவதுமாகவே சீரியா தேசத்து திருச்சபை தலைமைத்துவத்தை ஏற்றுக்கொண்டார்கள்.*

- *<u>கிறிஸ்தவர்களின் ஒன்றிணைப்பு</u>: தோமா வழி கிறிஸ்தவர்களும் சீரிய கிறிஸ்தவர்களும் ஒன்றாகவே ஆராதனை செய்து வந்தார்கள். இப்படியாக இந்திய திருச்சபைகளின் வழிபாட்டு முறைகள் எல்லாம் சிரியன் திருச்சபைகளின் தலைமையின் கீழ் செயல்பட ஆரம்பித்தது. காலப்போக்கில் தோமாவழி கிறிஸ்தவர்கள் சீரிய கிறிஸ்தவர்களோடு திருமண உறவுகளில் சம்பந்தம் கலந்து ஒரே சமூகமாக மாறிவிட்டார்கள்.*

இந்தியாவில் 5 ம் நுற்றாண்டில் கிறிஸ்தவத்தின் வளர்ச்சி

- <u>சிரியன் கிறிஸ்தவம்</u>: பெர்சிய திருச்சபையானது தொடர்ந்து ஆயர்களையும் பேராயர்களையும் இந்தியாவிற்கு அனுப்பி வைத்தார்கள். பெர்சிய திருச்சபையின் வழிபாட்டு முறைகள், வேதாகம கோட்பாடுகள், பாரம்பரியங்கள் எல்லாவற்றையும் இந்திய திருச்சபைகள் ஏற்றுக்கொண்டன.
- <u>ஜான் கிறிசொஸ்தம் (*John Chrysostom of Antioch - 403 கிபி*)</u>: இவர் ஒரு முக்கியமான பேராயர். இவர் அப்போஸ்தலர் தோமா, தென் இந்தியாவில் அடக்கம் செய்யப்பட்டுள்ளார் என்றும் தன்னுடைய புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.
- <u>பேராயர் மனா (*Mana, the Bishop of Riwardashir, Persia*)</u>: கி.பி 470 இல், இவர் எழுதிய பல வேதாகம கட்டுரைகளும், பாடல்கள் மற்றும் புத்தகங்கள் யாவும் கிரேக்க மொழியில் இருந்து சிரியாக் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டு, இந்தியாவுக்கு அனுப்பிவைக்கப்பட்டன. பவுல் அப்போஸ்தலரால் எழுதப்பட்ட ரோமருக்கு எழுதின நிருபத்தின் விளக்கவுரை, சிரியாவின் எடஸா (*Edessa*) என்ற இடத்தில் சிரியாக் மொழியில் மொழிபெயற்க்கப்பட்டது. இந்த நிருபத்தை, கிரேக்க மொழியில் இருந்து சிரியாக் மொழியில், மார் கோமாய் (*Mar Komai*) என்ற பேராயர், இந்திய ஆயரான தானியேல் என்பவரின் உதவியுடன் மொழிபெயர்த்ததை, இந்திய கிறிஸ்தவர்கள் பயன்படுத்தினார்கள்.
- <u>இந்திய மாணவர்களுக்கு வேதாகம பயிற்சி</u>: கிபி 5ஆம் நூற்றாண்டு முதல், சிரியா தேசத்தில் இருந்த வேதாகம கல்லூரிகளில், இந்தியாவில் இருந்து அநேக மாணவர்கள் வேதாகமத்தை கற்றுக்கொள்ள அனுப்பி வைக்கப்பட்டார்கள். அங்கிருந்த வேத பண்டிதர்கள் மூலமாக, பவுல் அப்போஸ்தலரின் நிருபங்களை சிரிய மொழியில் மொழி பெயர்ப்பு செய்து இந்தியாவிற்க்கு அனுப்பி வைத்தார்கள்.

கிபி 6-8 நூற்றாண்டுகளில் இந்தியாவில் கிறிஸ்தவம்





- *<u>காஸ்மோஸ் (Cosmos)</u>: இவர் அலெக்சாந்திரிய கிறிஸ்தவ வணிகர், கி.பி 522 இல் வியாபார ஒப்பந்தங்கள் செய்வதற்கு இந்தியா வந்தார். இவர் தனது புத்தகத்தில் (Universal Christian Topography) இந்தியாவில் மலபார் பகுதியில் இருந்த திருச்சபைகளைபற்றி சான்று பகிர்ந்துள்ளார். பெர்சியா தேசத்திலிருந்து வந்த பேராயர், இந்திய திருச்சபைகளுக்கு பொறுப்பாக இருந்தது பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.*

- *<u>பேராயர் கிரகோரி (Bishop Grepory of Tours</u>): கிபி 590 ஆம் ஆண்டில், தனது புத்தகத்தில் (In Gloria Martyrium) தோமா, இந்தியாவில் துன்புறுத்தலுக்குள்ளாகி இரத்தசாட்சியாக மரித்தார் என்று குறிப்பிட்டுள்ளார். தோமா அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் துறவியர் மடமும், திருச்சபையும் இருந்ததாக குறிப்பிட்டுள்ளார்.*

- *<u>ஐசிடோர் (Isidore of Seville கி.பி 636</u>): இவர் தான் முதன் முதலாக இந்தியாவில் கலமினா (Calamina) என்ற இடத்தில் தோமாவின் கல்லரை இருந்தது என்று குறிப்பிட்டுள்ளார். மைலாப்பூர் முன்பு கலமினா என்று அழைக்கப்பட்டதாக சரித்திர ஆசிரியர்கள் கூறுகின்றார்கள்.*

- *<u>இரண்டாவது சிரியன் கிறிஸ்தவர்கள் குடியேற்றம்</u>: கிபி 8ஆம் நூற்றாண்டில் பெர்சியாவில் கிறிஸ்தவர்களுக்கு எதிரான இஸ்லாமியர்களின் கொலைவெறி தாக்குதலில் இருந்து தப்பிக்க, சிரியன் கிறிஸ்தவர்கள் இரண்டாவது முறையாக கேரளாவில் கிராங்கனூருக்கு வந்து சேர்ந்தார்கள். அப்போது கொச்சியில் மன்னராக இருந்த வீர ராகவ சக்ரவர்த்தி, இவர்களுக்கு கொச்சி பகுதியில் இடம் கொடுத்து அங்கே திருச்சபைகளை கட்டுவதற்கும் அரசாங்கத்தின் மூலமாக பல சலுகைகள் கொடுத்தது இன்றும் தாமிர தகட்டில் ஆதாரமாக உள்ளது.*

ஒன்பதாம் நூற்றாண்டில் இந்தியாவில் கிறிஸ்தவம்



- <u>ஆங்கிலோ-சாக்சன் குறிப்பு *(The Anglo-Saxon Chronicle* கிபி *876)*</u>: இங்கிலாந்து பேரசர் *Alfred the great of England* என்பவர் அப்போஸ்தலனாகிய தோமாவின் கல்லறை சிதிலம் அடைந்துள்ளது என்பதை கேள்விப்பட்டு, அதை புதுப்பததறகாக பேராயர் *Sighelm (Bishop of Shireburn)* என்பவர் தலைமையில் ஒரு குழுவை இந்தியாவிற்கு அனுப்பி வைத்தார். இவர்கள் தோமாவின் கல்லறையை புதுப்பித்துவிட்டு, பின்னர் திரும்பிச் செல்லும்போது இந்தியாவின் உயர்தர மசாலாப் பொருட்களோடு சென்றதாக ஆதாரங்கள் இருக்கின்றது.
- <u>சிரியன் திருச்சபை ஆயர்கள்</u>: கிபி *823* இல், சிரியா தேசத்து ஆயர்கள் *Mar Sapore* மற்றும் *Mar Parut* இந்தியா வந்தார்கள். இவர்கள் கொச்சி மன்னர் சக்ரவர்த்தியிடம் சென்று தங்களுக்கு ஒரு கிராமத்தையும் அதில் திருச்சபைகளை கட்டவும் அனுமதிக்குமாறு கேட்டுக்கொண்டதின் பேரில் மன்னர் அவர்களுக்கு கேரளாவில் கொச்சி பகுதியில் குடியேற அனுமதித்தார். இதற்கான சலுகைகளை தாமிரத்தாலான ஐந்து தகடுகள் கோட்டயத்தில் உள்ள *Jacobite* வேதாகம கல்லூரியிலும் மற்றும் திருவல்லாவில் உள்ள *Mar Thoma* திருச்சபையில் இன்றும் கானப்படுகிறது.
- <u>தாமிர தகடு சாசனம்</u>: கொச்சியில் உள்ள *Tarisa* திருச்சபை கிறிஸ்தவர்களுக்கு மானியங்களையும் மற்றும் சில உரிமைகளையும் கொடுக்கப்பட்டுள்ளதை கானலாம். அரசாங்கத்தின் இந்த உதவியினால் ஒடுக்கப்பட்ட சமுதாயத்தை சேர்ந்தவர்களைவிட தோமா வழி கிறிஸ்தவர் களுக்கு சமுதாயத்தில் அங்கிகாரமும், அந்தஸ்தும் உயர்ந்தது. கேரளாவில் நடுத்தர வர்க்கமான நாயர்களுக்கு சமமான அந்தஸ்தும் தோமாவழி கிறிஸ்தவர்களுக்கு கிடைத்தது.

கிபி 12-15 நூற்றாண்டுகளில் இலத்தீன் கிறிஸ்தவம்



- *<u>1).சீனாவுக்கான திறந்த கதவு</u>: தெற்காசியாவில் ஆதிக்கம் செலுத்திய மங்கோலியர்கள் சீனாவில் வியாபாரம் செய்ய ஐரோப்பிய வணிகர்களுக்கு அனுமதி கொடுத்தால், ரோமன் கத்தோலிக்க மிஷனரிகள் சீனாவுக்கு சென்றார்கள்.*
- *<u>2).மார்கோ போலோ (Marco Polo)</u>: இவர் ஐரோப்பாவில் வெனிசுலாவின் பெரிய வியாபாரியாக இருந்து, சீனா முழுவதும் கிபி 1271-1295 ல் சுற்றுப்பயணம் மேற்கொண்டு இறுதியாக இந்தியாவுக்கு வந்தார். தன்னுடைய புத்தகத்தில் (Book of the Marvels of the World) கிறிஸ்தவர்களும் முஸ்லிம்களும் சீனாவிலிருந்து அப்போஸ்தலர் தோமாவின் கல்லறை இருக்கும் மைலாப்பூருக்கு புனித யாத்திரை செல்லுகின்றார்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.*
- *<u>3).ஜான் ஆஃப் மான்டே (John of Monte Corvind 1305 கிபி)</u>: ரோமன் கத்தோலிக்க பிரான்சிஸ்கன் மிஷனரியாக, சீனாவுக்கு சென்று கிறிஸ்தவத்தை பரப்பி, சீன திருச்சபைகளுக்கு பேராயராகவும் இருந்ததால் சீன கிறிஸ்தவ திருச்சபைகளின் தந்தை என்று அழைக்கப்படுகிறார். ஒருமுறை சீனாவிலிருந்து ஐரோப் பாவுக்கு செல்லும் வழியில் கொச்சியில் தங்கி, அங்கிருந்த தோமா வழி கிறிஸ்தவர்களை சந்தித்தார். அப்போது அவர்களுக்கு பேராயர் இல்லாமல் இருந்ததால் அங்கிருந்த குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டார். இலத்தீன் கிறிஸ்தவத்தை கொச்சி யில் சிலகாலம் பரப்பினார். அப்போது மூன்றாவது பேரரசரான Khaishan Kulug Khan (கிபி 1307–11) என்பவரும் அவரது தாயாரும் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார்கள். கொச்சி மன்னரும் அவருடன் சுமார் 6000 பேர் கிறிஸ்தவர்களானார்கள். John of Monte இந்தியாவில் 13 மாதங்கள் இலத்தீன் கிறிஸ்தவத் தை அறிமுகம் செய்து பின்னர் ஐரோப்பா சென்றுவிட்டார்.*

கிபி 12-15 நூற்றாண்டுகளில் இலத்தீன் கிறிஸ்தவம்

- *4).ஜோர்டான் கேட்லின் (Jordan Chatelain 1320 கிபி)*: இவர் பிரெஞ்சு தேசத்தை சேர்ந்த ரோமன் கத்தோலிக்க டொமினிகன் மிஷனரி ஆவார். இவரும் மற்றும் நான்கு பிரான்சிஸ்கன் மிஷனரிகளும் ஐரோப்பாவிலிருந்து சீனாவுக்கு நற்செய்திபணி செய்ய கொச்சி வழியாக பயணம் மேற்கொண்டார்கள்.
- *5).பம்பாயில் கிறிஸ்தவர்கள்*: பருவகால சூழ்நிலை சரியில்லாத காரணத்தினால் கேட்லின் பிரயாணம் செய்த கப்பல் பம்பாயில் தானே என்ற பகுதியில் தரையிறக்கப்பட்டனர். அங்கே அவர்கள் ஒரு சில கிறிஸ்தவ சமூகங்கள் இருப்பதை கண்டார்கள். இந்த கிறிஸ்தவர்களுக்கு ஆயர்களோ பேராயர்களோ இல்லாமல் இருந்ததால் தொழுவத்திலிருந்து சிதறடிக்கப்பட்ட ஆடுகளைப்போல இருந்தார்கள்.
- *6).இலத்தின் கிறிஸ்தவம்*: கேட்லின் தானே பகுதியில் இருந்த கிறிஸ்தவர்கள் ஆகவே அவர்கள் மத்தியில் நற்செய்திபணி அறிவித்து 130 பேருக்கு ஞானஸ்நானம் கொடுத்தார்கள். இந்த 5 ரோமன் கத்தோலிக்க மிஷனெரிகளும் கிறிஸ்துவின் நற்செய்திபணி நிமித்தமாக தானேயில் தங்கியிருந்தபோது, இஸ்லாமியர்களின் பல துன்புறுத்தல்களுக்கு ஆளானார்கள்.
- *7).இரத்தசாட்சி*: ஜோர்டான் கேட்லியனின் நண்பர்களான நான்கு பிரான்சிஸ்கன் மிஷனெரிகளும் இஸ்லாமிய துன்புறுத்தல்கள் மத்தியிலும் நற்செய்திபணி செய்துவந்தத்தில் அநேகர் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டார்கள். இந்நிலையில் இஸ்லாமிய ஆளுநர், கடும் கோபம் கொண்டு அவர்களை வாளால் வெட்டி கொலை செய்ய உத்தரவிட்டதால் அவர்கள் இரத்த சாட்சியாக மரித்தார்கள். ஆகவே முஸ்லிம்கள் ஆதிக்கம் செலுத்தும் வட இந்தியாவில் பிரசங்கிப்பது கடினம் என்பதை உணர்ந்த ஜோர்டான் கேட்லின், கேரளாவிலுள்ள கொச்சிக்கு நற்செய்திபணி செய்ய சென்றார்.

இந்தியாவில் லத்தீன் கிறிஸ்தவத்தின் வீழ்ச்சி



- *1).ப்ரியர் ஓடோரிக் (Friar Odoric of Pordenone 1324): இவர் ஒரு ரோமன் கத்தோலிக்க பிரான்சிஸ்கன் மிஷனரி ஆவார். இவர் சீனாவில் நற்செய்திபணி செய்ய கொச்சி வழியாக கப்பலில் பிரயாணம் மேற்கொண்டார். அப்போது பம்பாயில் உள்ள தானே பகுதியில் தரையிரங்கினார். அப்போது அங்கிருந்த சிரியா தேசத்து திருச்சபைகள் மூலம் பரப்பப்பட்ட நெஸ்டோரியன் கிறிஸ்தவ சமூகத்தைப் பார்வையிட்டார். பின்னர் இலங்கைக்கு செல்லும் வழியில் கேரளாவின் மலபார் கடற்கரைக்கும், பின்னர் சென்னையில் மைலாப்பூரில் உள்ள அப்போஸ்தலர் தோமாவின் கல்லறைக்கும் பயணம் செய்து கிறிஸ்தவத்தை பரப்புவதற்காக சீனாவுக்கு சென்றார்.*

- *2).ஜான்- டி- மரிக்னொல்லி (John De Marignolli 1348 கிபி): இவர் ஒரு ரோமன் கத்தோலிக்க பிரான்சிஸ்கன் மிஷனெரி ஆவார். இவர் இலத்தீன் கிறிஸ்தவத்தை இந்தியாவில் பரப்புவதற்காக சீனாவிலிருந்து இந்தியாவிலுள்ள கொச்சி பகுதிக்கு வந்து கொல்லம் பகுதிக்கு வந்து, அங்கு லத்தீன் திருச்சபைகள் இருப்பதை கண்டுபிடித்தார். ஆகவே இந்தியாவில் 16 மாதங்கள் தங்கியிருந்து இலத்தீன் கிறிஸ்தவத்தை பரப்பினார். பின்னர் அப்போஸ்தலர் தோமா கட்டிய திருச்சபையை ஆய்வு செய்ய மைலாப்பூருக்கு சென்றார். பின்னர் கிபி 1350 ஆம் ஆண்டில் ஐரோப்பாவிற்கு பிரயாணப்பட்டு இந்தியாவில் லத்தீன் திருச்சபைகள் இருப்பதைப்பற்றி ரோமுக்கு அறிக்கை அனுப்பினார்.*

இந்தியாவில் லத்தீன் கிறிஸ்தவத்தின் வீழ்ச்சி

- *3). கொச்சி மறைமாவட்டம் (Diocese):* கேரளாவின் இலத்தீன் கிறிஸ்தவத்தில் சுமார் 15,000 பேர் இருந்ததினால், ஆகஸ்ட் 1329 இல், ரோமன் கத்தோலிக்க மறைமாவட்டம் ஏற்படுத்தப்பட்டது. கேரளாவில் மலபார் பகுதியை பொருத்தவரையில் இரண்டு கிறிஸ்தவ சமூகங்கள் அருகருகே வாழ்ந்து வந்தார்கள். இந்து மதத்திலிருந்து கிறிஸ்தவர்களானவர்கள் இலத்தீன் கிறிஸ்தவர்களாகவும், தோமா வழி கிறிஸ்தவர்கள் சிரியாவின் நெஸ்டோரியர் பிரிவை சேர்ந்தவர்களாகவும் இருந்தார்கள்.
- *4). இந்தியாவில் இலத்தீன் கிறிஸ்தவத்தின் வீழ்ச்சி:* இந்தியாவில் 14 ம் நூற்றாண்டின் இறுதியில் மங்கோலிய பேரரசானது, இஸ்லாமிய ஆட்சியாளர்களால் வீழ்ச்சியடைந்தது. இடைக்கால கிறிஸ்தவத்தில் முஸ்லீம்களுக்கு எதிராக ஐரோப்பிய ரோமன் கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் சிலுவைப்போரை நிகழ்த்தியதால் இஸ்லாமியர்களுக்கும் ஐரோப்பிய கிறிஸ்தவர்களுக்கும் பகைமை வளர்ந்தது. இதன் காரணமாக கேரளாவில் ஆதிக்கம் செலுத்திய இஸ்லாமிய ஆட்சியாளர்கள், வாள்முனையில் கொச்சி மற்றும் கொல்லம் பகுதியில் வாழ்ந்த இலத்தீன் கிறிஸ்தவர்களை இஸ்லாமியர்களாக மாற்றினார்கள். மேலும் ரோமன் கத்தோலிக்க இலத்தீன் மிஷனரிகளை, இந்தியாவிக்குள் நுழையவிடாமல் அரபிய முஸ்லீம்கள் *Silk Road* என்று அழைக்கப்படும் ஆசியாவின் உலக வர்த்தக சாலையை கைப்பற்றிக்கொண்டதால் ஐரோப்பிய வியாபாரிகள் மற்றும் ரோமன் கத்தோலிக்க இலத்தீன் மிஷனெரிகள் இந்தியாவுக்கு வரமுடியாததாலும், இந்தியாவில் இலத்தீன் கிறிஸ்தவர்களுக்கு எதிரான அடக்குமுறையினால் இந்தியாவில் ரோமன் கத்தோலிக்க இலத்தீன் கிறிஸ்தவம் வீழ்ச்சியடைந்தது.

இந்தியாவில் பெர்சிய திருச்சபையின் ஆளுமை



- <u>இந்திய திருச்சபை</u>: இந்திய திருச்சபைகள் யாவும் கிழக்கு சிரியாவில் உள்ள பெர்சிய திருச்சபையின் தலைமைத் துவத்தின்கீழ் செயல்பட்டுவந்தது. இந்திய திருச்சபைககளில் சுமார் 30,000 குடும்பங்கள் சிரியாவின் நெஸ்டோரியர் கிறிஸ்தவ பிரிவை சேர்ந்தவர்கள் ஆயினும், இந்தியாவில் தோமாவழி கிறிஸ்தவர்களாக அறியப்பட்டார்கள்.
- <u>சிரியன் திருச்சபையின் அதிகார மையம்</u>: பெர்சிய பிரதம பேராயர் அர்மீனியாவில் இருந்தார். அவருக்கு கீழாக 12 கார்டினல்கள், பேராயர்கள் மற்றும் ஆயர்கள் என அழைக்கப்படும் அதிகார பிரிவுகள் மூலமாக திருச்சபைகளை நிர்வாகித்து வந்தார்கள். அதே நேரத்தில் உள்ளூர் ஆயர்களால் திருச்சபை நிர்வாகம் செயல்பட்டுகொண்டு இருந்தது. தோமா வழி கிறிஸ்தவர்களுக்கு கேரளாவின் கிராங்கனுர் திருச்சபைதான் மறைமாவட்ட பேராலயமாக இருந்துவந்தது.
- <u>பேராயரின் பங்கு</u>: பேராயர்கள் திருச்சபைகளின் தலைவராக இருந்து புதிய ஆலயங்களை பிரதிஷ்டை செய்வதும், ஆயர்களை நியமனம் செய்வதும், திருவிருந்து மற்றும் ஞானஸ்நானம் கொடுக்கும் பணியையும் செய்து வந்தார்கள். புதிய ஆலயம் கட்டும் முதல் கல்லை பேராயர் ஆசீர்வதித்து ஆரம்பிக்கும்வரை திருச்சபைகளை கட்டவோ அல்லது திருவிருந்து ஆராதனை நடத்தவோ முடியாது.
- <u>இந்திய திருச்சபையில் நெருக்கடி</u>: கிபி 15ஆம் நூற்றாண்டின் இறுதியில் தோமா வழி கிறிஸ்தவர்களுக்கும் பெர்சிய திருச்சபைக்கும் இடையே கருத்துவேறுபாடு ஏற்பட்டதினால் சுமார் 40 ஆண்டுகள் பெர்சிய ஆயர்கள் வரவில்லை. இந்த கருத்துவேறுபாடுகள் நீக்கப்பட்டதால் கிபி 1490 ஆம் ஆண்டில் பேராயர்களான மார் தோமா (Mar Thoma) மற்றும் மார் ஜான் (Mar John) ஆகியோர் இந்தியா வந்தார்கள்.

தோமா வழி கிறிஸ்தவர்களின் வாழ்வியல் முறைகள்

- *சமூக வாழ்க்கை:* தோமா வழி கிறிஸ்தவர்கள், பண்டைய பழக்கவழக்கங்கள் கலாச்சாரங்களை பின்பற்றினார்கள். இவர்கள் சமூக வாழ்க்கையில் உயர்சாதி பிராமணர் களுக்கு அடுத்த நிலையில் இருந்தார்கள். தோமாவழி கிறிஸ்தவர்களும் நாயர்கள் மற்றும் பிரபுக்களைப் போல யானைகளின் மீது சவாரி செய்யும் உரிமையும் அந்தஸ்தும் கொடுக்கப்பட்டிருந்ததால் சுயமரியாதை, சமூக அந்தஸ்து கொண்டவர்களாக வாழ்ந்து வந்தார்கள்.
- *2).பொருளாதார வாழ்க்கை:* தோமாவழி கிறிஸ்தவர்கள் வணிகர்களாக, அரசாங்க பொறுப்புகளிலும், ஆட்சியாளர் களின் ஆதரவை தொடர்ந்து அனுபவித்து வந்தார்கள். இதனால் பொருளாதாரத்தில் செல்வ செழிப்புடன் வாழ்ந்துவந்தார்கள்.
- *3).அரசியல் வாழ்க்கை:* தோமா வழி கிறிஸ்தவர்களின் அரசியல் வாழ்க்கை இரண்டு நாடுகளுக்கிடையே இருந்தது. ஒன்று இந்தியாவில் மலபாரின் அரசியல் மற்றும் சமூக கட்டமைப்புகளுக்கும், மற்றொன்று கிழக்கத்திய-சிரிய திருச்சபையின் மதம் சார்ந்த தலைமைத்துவம் இடையே இருந்தது.
- *4).கலாச்சார வாழ்க்கை:* தோமா வழி கிறிஸ்தவர்கள் உயர் சாதி மக்களுக்கு இணையாக சமூக-அரசியல் அந்தஸ்தை அனுபவித்தனர். தோமா வழி கிறிஸ்தவர்கள் கலாச்சாரத்தில் இந்துக்களாக, மதத்தில் கிறிஸ்தவர்களாக மற்றும் வழிபாட்டில் கிழக்கித்தியர்களாக வாழ்ந்து வந்தார்கள். இவர்களின் வாழ்க்கைதரமும் கலாச்சாரமும் உயர்சாதி இந்துக்களின் வாழ்க்கைக்கு நிகராகவே கானப்பட்டது. இவர்கள் இந்திய கலாச்சாரத்தையே பின்பற்றி வாழ்ந்து வந்தார்கள்.

தோமா வழி கிறிஸ்தவர்களின் வாழ்வியல் முறைகள்

- *5).மத வாழ்க்கை:* தோமா வழி கிறிஸ்தவர்கள் சிரியாக் மொழியில், ஆராதனையை பின்பற்றினார்கள். அந்தியோகியாவின் நெஸ்டோரியன் பிரிவை சேர்ந்தவர் களாக இருந்த போதிலும், தங்கள் பாரம்பரியங் களையும் கலாச்சாரங்களையும் தக்க வைத்துக் கொண்டார்கள்.

- *6).திருச்சபையின் பாரம்பரியம்:* தோமாவழி திருச்சபைகள் உள்ளூர் சூழ்நிலைகளுக்கு ஏற்ப பாரம்பரியங்களை பின்பற்றினார்கள். சில திருச்சபைகளின் கருவரையில் (Alter) சிலுவை மட்டுமே வைக்கப்பட்டு, இந்து கோவில்களின் வடிவமைப்பில் திருச்சபைகள் கட்டப்பட்டிருந்தன. ஆனால் ஆலயத்தில் மணிகள் எதுவும் கட்டப்படவில்லை. கிறிஸ்தவர்கள் திருச்சபைக்குள் நுழைவதற்கு முன்பு தங்கள் கைககளையும், கால்களைக் கழுவிக்கொண்டு, உள்ளே நுழைந்ததும், தலையைத் தரையில் படும்படி முகங்குப்புற விழுந்து கடவுளை தொழுதுக்கொண்டார்கள்.

- *7).சாதி அமைப்பு:* தோமா வழி கிறிஸ்தவர்கள், உயர் சாதியினராக சமூகத்தால் மதிக்கப்பட்டார்கள். ஆகவே இந்து சமுதாயத்தின் சாதீய கட்டமைப்பிற்குள் வாழ்ந்தார்கள்.

- *8).நற்செய்திபணி:* தோமா வழி கிறிஸ்தவர்கள் ஒருபோதும் மிஷனெரிபணியை செய்து ஆத்தும ஆதாயம் செய்யவில்லை. இவர்கள் ஒருபோதும் பிற இனத்தவரை கிறிஸ்தவராக்கும் முயற்ச்சியை மேற்கொள்ளவில்லை. ஏனெனில் அரசாங்க மானியங்கள், அதிகாரங்கள் இழக்கும் நிலைகள் கானப்பட்டது. மேலும் உயர்சாதி இந்துக்களைப் போல ஒடுக்கப்பட்ட மக்களை சமூகத்தில் தரம் தாழ்ந்தவர்களாக கருதியதால் நற்செய்தியணியில் ஆர்வம் காட்டவில்லை. இவர்களின் பிள்ளைப்பேற்றினால் மட்டுமே எண்ணிக்கையில் அதிகமானார்கள்.

மேற்கத்திய நாடுகளின் காலனித்துவத்தின் ஆரம்பம்

- <u>உலக வர்த்தகங்களில் இஸ்லாமியத்தின் தாக்கம்</u>: கிபி 8 ம் நூற்றாண்டில் இஸ்லாமியத்தின் எழுச்சி ஆரம்பமாகி உலகின் பெரும்பகுதிகள் இஸ்லாமிய ஆட்சியாளர்களால் ஆளப்பட்டது. கிபி 12-15 ம் நூற்றாண்டில் தரைமார்க்க உலக வர்த்தக சாலை *Silk Road* முழுவதும் அரபிய முஸ்லிம்களின் கைவசமானது. முஸ்லிம்கள் கைப்பற்றிய புனித பூமியை *(Holy Land)* மீட்பதற்காக ஐரோப்பிய கிறிஸ்தவ நாடுகள் 7 முறை சிலுவை போர்களை நடத்தியும் தோற்றுப் போனார்கள். ஆசியாவுக்கு கொண்டுவரும் ஐரோப்பிய பொருட்களுக்கு, அரபியர்கள் அதிகவரி விதித்ததால், ஐரோப்பிய பொருளாதாரமே ஸ்தம்பித்துபோயிற்று. ஆகவே ஆசியாவில் வர்த்தகம் செய்வதற்காக கடல்மார்க்கமாக புதிய வழியைக் கண்டுபிடிக்க விரும்பினார்கள்.
- <u>டோர்டெசிலாஸ் ஒப்பந்தம் (*Treaty of Tordesilas*)</u>: கிபி 15 ம் நூற்றாண்டில் உலகம் முழுவதும் தங்கள் காலனி ஆதிக்கத்தை நிலைநாட்ட விரும்பிய ரோமன் கத்தோலிக்க நாடுகளான ஸ்பெயின் போர்ச்சுகல் சண்டையிட்டுக் கொண்டார்கள். போப்பாண்டவர் ஆறாம் அலெக்சாண்டர் தலையிட்டு, கிபி 1494, ஜூன் 7 ம் நாள் இந்த உலகத்தை இரண்டாக பிரித்து, கிழக்கு பகுதியை போர்த்துகீசியர்களின் காலனித்துவ, பொருளாதார, அரசியல் மற்றும் மத விரிவாக்கத்திற்க்கும் மேற்கு பகுதியை ஸ்பெயினுக்கும் வழங்க உத்தரவிட்டார். மேலும் இந்த இரண்டு நாடுகளும் தாங்கள் கைப்பற்றும் நாடுகளில் கிறிஸ்தவ திருச்சபைகள், துறவியர் மடங்கள் *(Monastry)* மற்றும் நற்செய்திபணி செய்ய ரோமன் கத்தோலிக்க மிஷனெரிகளை அனுப்பவும், இந்த உலகத்தை கிறிச்தவமக்கவும் கட்டளையிட்டு, ஸ்பெயினில் *Tordesilas* என்னுமிடத்தில் ஒப்பந்தத்தை ஏற்படுத்தினார். இதுதான் *Treaty of Tordesilas* என்று அழைக்கப்படுகிறது.

வாஸ்கோட-காமா வருகை

- <u>போர்ச்சுகல் மன்னரின் ஆவல்</u>: இந்தியாவோடும் தென்கிழக்கு ஆசியாவிலும் வியாபாரம் செய்ய போர்ச்சுகல் மன்னர் இரண்டாம் ஜான், கடல் வழியைக் கண்டுபிடிக்க விரும்பினார். இதன் முயற்சியாக போர்ச்சுக்கல் நாட்டிலிருந்து தென்னாப்பிரிக்கா துறைமுகமான *Gate of Hope* பகுதியை சுற்றி வந்து இந்தியாவிற்கு வரும் கடல்பாதையை வாஸ்கோட-காமா கண்டுபிடித்தார். இது பல நூற்றாண்டுகளாக ஆசியாவுக்கு செல்லும் கடல்பாதையை தேடிக்கொண்டிருந்த ஐரோப்பிய வர்த்தகர்களுக்கு பெரிய வரபிரசாதமாக இருந்தது.

- <u>வாஸ்கோட-காமா</u>: போர்த்துகீசியரான இவர் ஐரோப்பாவிலிருந்து முதல்முறையாக இந்தியாவிற்கு வரும் கடல்பாதையை மூலமாக ஐரோப்பிய வணிக பொருட்களுடன் *1498* மே *21* அன்று கேரளாவின் கோழிக்கோடு *(Calicut)* துறைமுகத்திற்கு வந்தடைந்தார். இங்கு தோமாவழி கிறிஸ்தவர்களை கண்ட வாஸ்கோடகாமா மிகவும் மெய்சிலிர்த்துப்போனார். இந்தியாவின் மசாலா பொருட்களுக்கு ஐரோப்பாவில் பெரிய சந்தை இருந்ததால், கொச்சி சமஸ்தானத்தின் மன்னர் போர்த்துகீசியர்களுடன் ஒப்பந்தம் செய்ய ஆர்வமாக இருந்தார். இந்நிலையில் ஐரோப்பிய நாடுகள் இந்தியாவில் இருந்து அதிகமான மிளகு, மசாலா பொருட்கள், பட்டு, கம்பளங்கள், மயில்கள், இரப்பர், தேயிலை வியாபாரத்தில் அதிக அளவில் வியாபார ஒப்பந்தங்கள் செய்தார்கள்.

- <u>இந்தியாவில் மேற்கத்திய கிறிஸ்தவம்</u>: வாஸ்கோட-காமாவின் வருகையானது இந்திய திருச்சபையின் வரலாற்றில் மட்டுமல்ல, மேற்கத்திய நாடுகளுடனான இந்தியாவின் மத ரீதியாகவும் கலாச்சார தொடர்புகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தியது. தோமா வழி இந்திய கிறிஸ்தவர்கள் மேற்கத்திய கிறிஸ்தவர்களை அன்புடன் சகோதரர்களாக வரவேற்றார்கள்.


North Atlantic Ocean
EUROPE
ASIA
Azores
Lisbon, Portugal
(Began voyage in July 1497)
(Returned in Sept. 1499)
Arabia
India
Goa
Return to Portugal (Aug 1498)
Cape Verde Islands
AFRICA
Calicut (May 1498)
Malindi
Equator
Mombasa
Sea Route to East Asia
Voyage to India
Moçambique
Indian Ocean
St. Helena Bay
Natal
South Atlantic Ocean
Cape of Good Hope (Nov. 1497)
0 1,000 Miles
0 1,000 Kilometers

தோமா வழி கிறிஸ்தவர்கள் மீதான போர்த்துகீசியர்களின் அணுகுமுறை



- <u>சகோதரத்துவம்</u>: *16 ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தோமாவழி கிறிஸ்தவர்களுக்கும் போர்த்துகீசிய கிறிஸ்தவர்களுக்கும் இடையிலான உறவானது அன்பிலும் கிறிஸ்துவுக்குள் சகோதரர்களாக இருந்தார்கள்.*
- <u>தோமா வழி கிறிஸ்தவர்களுக்கு சிக்கல்கள்</u>: *கேரளாவில் கோழிகோடு சமஸ்தானத்தின் மன்னருக்கும் கொச்சி சமஸ்தான மன்னருக்கும் இடையே தொடர்ந்து நடைபெற்ற யுத்தங்கள், கிராங்கனூரில் வசித்துவந்த தோமா வழி கிறிஸ்தவர்களுக்கு தொடர்ந்து சிக்கலை ஏற்படுத்தின. ஆகவே தங்கள் உரிமைகளையும் சலுகைகளையும் தொடர்ந்து அனுபவிக்க போர்த்துகீசிய கிறிஸ்தவர்களின் உதவியை நாடினார்கள்.*
- <u>தோமா வழி கிறிஸ்தவர்களின் சமுதாய கௌரவம்</u>: *பொருளாதார வலிமை வாய்ந்த போர்த்துகீசிய கிறிஸ்தவர்களின் வருகையால், தோமா வழி கிறிஸ்தவர்களின் சமூக அந்தஸ்தும் கௌரமும் அதிகரித்தது. ஆகவே உள்ளூர் ஆட்சியாளர்கள் தோமாவழி கிறிஸ்தவர்களின் உரிமைகள் மற்றும் சலுகைகளை தொடர்ந்து வழங்கினார்கள். 4) சிரிய பேராயர்களும் தோமா வழி கிறிஸ்தவர்களும்: கிறிஸ்தவ வாழ்க்கை வழிமுறையில் தோமா வழி கிறிஸ்தவர்கள் கிழக்கத்திய பெர்சிய திருச்சபையோடு (East-Syrian Persian Church) தங்கள் விசுவாசத்தை சந்தேகபடவே இல்லை. ஆகவே மேற்கத்திய இலத்தீன் கிறிஸ்தவமே உண்மையானது என்ற கருத்தை அவர்கள் ஏற்றுக்கொள்ளவே இல்லை. இப்போதுதான் பேதுரு வழி கிறித்துவத்தின் நம்பிக்கையானது, தோமா வழி கிறிஸ்தவத்திலிருந்து வேறுபட்டது என்று கருதினார்கள்.*

இந்தியாவில் போர்த்துகீசிய மிஷனெரிகளின் அணுகுமுறை

- *<u>மிஷனெரி பணித்தளம்</u>: கிபி 16 ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், கடலோர பகுதிகளில் வசித்துவந்த மீனவர் களிடையே ரோமன் கத்தோலிக்க மிஷனெரிகள் கிறிஸ்தவத்தை பரப்பி, பின்னர் தொலைவில் இருந்த கிராமங்கள், நகரங்களிள் நற்செய்திபணி செய்தார்கள்.*
- *<u>நற்செய்திபணி முறைகள்</u>: ரோமன் கத்தோலிக்க மிஷனரிகள், கிறிஸ்தவத்தை எந்தவிதமான இந்திய மயமாக்கலுக்கும் (Indianization), இந்திய கலாச் சாரத்துடன் இணைத்து (Inculturation) பரப்புவதை விரும்பாமல், மேற்கத்திய கலாச்சார வழிமுறையிலே மதமாற்றமடைந்த கிறிஸ்தவர்களுக்கு போர்த்துகீசிய பெயர்களை கொடுத்து, மேற்கத்திய கலாச்சாரத்தை பின்பற்ற செய்தார்கள்.*
- *<u>கிறிஸ்தவத்தின் வளர்ச்சி</u>: ரோமன் கத்தோலிக்க மிஷனெரிகளின் நற்செய்திபணி ஒடுக்கப்பட்ட சமுதாயத்தை சேர்ந்தவர்களிடம் வேகமாக பரவியது. சாதிகள் மற்றும் இனங்களுக்கு அப்பாற்பட்ட கலப்பின திருமணங்களை (Inter-Racial Marriage) ஊக்குவித்தார்கள். கிறிஸ்தவர்களாக மாறியவர்களுக்கு வேலைவாய்ப்பு களும், சலுகைகளும், பாதுகாப்பும் பொருளாதார உதவிகளையும் செய்து கொடுத்தார்கள். இதனால் இந்திய பெண்களில் அதிகமானோர் கிறிஸ்தவர்களானார்கள். போர்த்துகீசிய ஆண்களுடன் திருமணம் செய்துகொண்ட அல்லது மறுமனையாட்டிகளாக வாழ்ந்த இந்திய பெண்கள் பெற்றெடுத்த பிள்ளைகளுக்கு எவ்வித கேள்வியும் எழுப்பாமல் ஞானஸ்நானம் கொடுத்தார்கள். இவர்கள் தான் முதல்தலைமுறை கிறிஸ்தவர்கள் ஆவார்கள். இதன் விளைவாக, கிறித்தவம், தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் மதம் என்று உயர்சாதி மக்கள் கருதினார்கள்.*

போர்த்துகீசியர்களின் நற்செய்திபணி



- <u>ரோமன் கத்தோலிக்க மிஷனரிகள்</u>: 16 ம் நூற்றாண்டில் இந்தியாவிற்கு வந்த ரோமன் கத்தோலிக்க திருச்சபை ஆழமாக வேரூன்றியது. இதற்கு காரணம் ரோமன் கத்தோலிக்க மிஷனெரிகளின் குழுக்களான பிரான்சிஸ்கன்கள், ஜேசுயிட்டுகள், டொமினிகன்கள், அகஸ்தீனியர்கள், கார்மலைட்டுகள், கபுச்சின்ஸ் ஆவார்கள்.
- <u>கிராங்கனூர் வேதாகம கல்லூரி</u>: ரோமன் கத்தோலிக் மிஷனெரிகள், தோமா வழி கிறிஸ்தவர்களிடையே மேற்கத்திய இலத்தீன் வழிபாடு முறைகள், வேதாகம கோட்பாடுகள் மற்றும் பாரம்பரியங்களை அறிமுகப்படுத்த கிபி 1514 இல் கிராங்கனூரில் வேதாகம கல்லூரியை நிறுவினார்கள். இதில் தோமாவழி கிறிஸ்தவ மாணவர்கள் வேதாகம கல்வி கற்றுகொண்டு, ஆயர்களாக மலபாரிலும் மற்ற பகுதிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டார்கள்.
- <u>சமுதாய பணி</u>: ரோமன் கத்தோலிக்க மிஷனரிகள் கிறிஸ்தவத்தை எல்லா சமூகத்தினரோடும் பரப்பியதோடு, பல சமூக தொண்டுகளையும் மனிதாபிமான உதவிகளையும் செய்தது தோமாவழி கிறிஸ்தவர்களிடையே பெரிய வரவேற்ப்பு பெற்றது. மதம்மாறிய மக்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தது மட்டுமல்லாமல் சிறைச் சாலைகளில் இருந்த கைதிகளுக்கு நற்செய்தியை அறிவித்து அவர்களை நல்வழிப்படுத்தினார்கள். அப்படியே மரண தண்டனைபெற்ற குற்றவாளிகளின் குடும்பங்களை பராமரித்துக்கொண்டார்கள். அப்படியே ஒடுக்கப்பட்ட ஏழைகள், நோய்வாய்ப்பட்டவர்கள், ஊனமுற்றோர், ஆதரவற்றோர் இறக்கும்போது, அவர்களை கண்ணியமாக அடக்கம் செய்தார்கள். பொதுமக்கள் மத்தியில் கிறிஸ்தவ சேவையானது பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது.

ஒடுக்கப்பட்ட மக்களிடம் கிறிஸ்தவ நற்செய்திபணி



- ஒடுக்கப்பட்ட இனத்தவருக்கு நற்செய்தி: ரோமன் கத்தோலிக்க மிஷனரிகள் இந்தியர்களை கிறிஸ்தவத்திற்குள் கொண்டுவரவேண்டும் என்பதற்காக எல்லா வகுப்பு மக்களிடமும் கிறிஸ்தவத்தை பரப்பினார்கள். இந்நிலையில் கிபி 1571ஆம் ஆண்டில் கேரளாவில் ரோமன் கத்தோலிக்க திருச்சபையில் ஒடுக்கப்பட்ட இனத்தை சேர்ந்த புலையர்கள், ஈழவர்கள், முக்குவர்கள் ஆகியோர் கிறிஸ்தவர்களானார்கள்.
- மேற்கத்தியமயமாகுதல்: ரோமன் கத்தோலிக்க மிஷனரிகள், மதம் மாறிய கிறிஸ்தவர்களுக்கு போர்த்துகீசிய பெயர் களையும், மேற்கத்திய உடைகளை அணிந்துகொள்ளவும், மேற்கத்திய பாரம்பரியத்தையும் கலாச்சாரத்தையும் ஏற்றுக்கொள்ளும்படி கட்டாயப்படுத்தினார்கள்.
- பெருங்கூட்ட மத மாற்றம் (Mass Conversion): கேரளாவில் கடற்கரைபகுதியில் முக்குவர் இன மீனவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே ஏற்பட்ட கலவரத்தின்போது, போர்த்துகீசியர்கள் முக்குவர்களுக்கு பாதுகாப்பாக இருந்ததால் சுமார் 18,000 பேர் கிறிஸ்தவ மதத்தை ஏற்றுக்கொண்டார்கள். இந்த மதமாற்றத்தில் பெரும்பாலும் ஒடுக்கப்பட்ட இனத்தை சேர்ந்த ஈழவர்கள், முக்குவர்கள் மற்றும் புலையர்கள் கிறிஸ்தவர்களாக மாறினார்கள்.
- மதம் மாற்றுவதில் சாதீய சிக்கல்: இந்தியாவில் வலுவான சாதீய கட்டமைப்பு காரணமாக, உயர் சாதி இந்துக்கள் கிறிஸ்தவத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. கிறிஸ்தவத்தை ஏற்றுக்கொண்டவர்களை குடும்பங்களிலிருந்தும் சமூகத்தில் இருந்தும் விலக்கி வைத்து தீண்டத்தகாதவர்களாகவே கருதப் பட்டார்கள். இதனால் உயர்சாதி மக்கள் கிறிஸ்தவத்தை ஏற்றுக்கொள்ள விருப்பம் காண்பிக்கத்தினால், உயர்சாதி கிறிஸ்தவர்கள் மிக குறைந்த அளவிலேயே இருந்தார்கள்.

போர்த்துகீசியர்களின் சமூக வாழ்வியல்முறை

- *<u>வாழ்க்கை முறைமை:</u>* கிபி *16* ம் நூற்றாண்டில் போர்த்துகீசிய கிறிஸ்தவர்கள் கோவா, கோழிகோடு, கொச்சி மற்றும் கிராங்கனூர் போன்ற பகுதிகளில் குடியேறினார்கள். இவர்களின் வாழ்க்கை முறையானது இந்திய கலாச்சாரத்தை அசூசி படுத்தியது. இவர்களில் பெரும்பாலானோர் பேராசை, பண ஆசை, வக்கீர புத்தி, மற்றும் காம இச்சைகள் மிகுந்தவர்களாக இருந்தார்கள்.
- *<u>மத வாழ்க்கை:</u>* போர்த்துகீசிய கிறிஸ்தவர்களின் மத நம்பிக்கையானது வெறித்தனத்தை *(Fanaticism)* கொண்டதாக போர்க்குணமிக்கதாக *(Militant)* இருந்தது. இவர்கள் போர்த்துகீசியப் பெயர்களையும், மேற்கத்திய உடை அலங்காரத்தையும் ஏற்றுக் கொள்ளுமாறு மதம்மாறிய இந்தியரிடம் கட்டாயப்படுத்தினார்கள்.
- *<u>போர்த்துகீசிய ஆண்களுக்கான பிரச்சினை:</u>* கேரளாவில் தொழில் செய்வதற்காக வந்த சுமார் *3000* போர்த்துகீசிய ஆண்களும், *1800* போர்த்துகீசிய இராணுவ வீரர்களும் குடியேறி இருந்தார்கள். இவர்கள் தங்கள் மனைவிமார்களை விட்டுவிட்டு இந்தியாவுக்கு தனியாக வந்ததால், சட்டவிரோத பாலியல் உறவுகள் அதிகரித்தது. ஆகவே போர்த்துகீசிய அரசாங்கம் கேரளாவிலும் இந்தியாவிலும் விபச்சாரத்தை சட்டப்பூர்வமாக்கியது. இதனால் ஒடுக்கப்பட்ட சமூகத்தை சேர்ந்த பல இந்திய தாய்மார்கள், பொருளாதார வறுமையினால் தங்கள் பெண்பிள்ளைகளை விபச்சாரத்தில் ஈடுபடுத்தினார்கள். போர்த்துகீசிய அதிகாரிகள் இந்திய பெண்களை திருமணம் செய்துகொள்ள போர்த்துகீசிய ஆண்களை பெரிதும் ஊக்குவித்தார்கள். இந்தியாவில் போர்த்துகீசிய ஆண்களுக்கு, கிறிஸ்தவர்களாக மாறிய இந்தியப் பெண்கள் மூலமாக அல்லது வைப்பாட்டிகள் மூலமாக பிறந்த பிள்ளைகள் தான், முதல் தலைமுறை போர்த்துகீசிய-இந்திய கிறிஸ்தவர்கள் ஆவார்கள். காலப்போக்கில் இவர்கள் பரங்கியர்கள் என்றும் *Munnutikar, Mesticos* மற்றும் *Topazes* என்றும் இந்தியாவில் அழைக்கப்பட்டார்கள்.

தோமா வழி கிறித்தவத்தின் மீதான போர்த்துகீசிய ஆதிக்கம்





- <u>திரிபு கோட்பாடு கிறிஸ்தவம் *(Heresy)*</u>: தோமா வழி கிறிஸ்தவ பாரம்பரியங்கள் ரோமன் கத்தோலிக்க இலத்தீன் வழி கிறிஸ்தவத்தின் வழிபாடுகளில் இருந்து திரிபு கொள்கை கோட்பாடுகள் நிறைந்ததாகவும், மூடநம்பிக்கை மிகுந்ததாகவும் போர்த்துகீசியர்கள் கருதினார்கள்.

- <u>கிழக்கத்திய கிறிஸ்தவத்தின் மீது மேற்கத்திய கிறிஸ்தவம்</u>: போர்த்துகீசியர்கள், தோமாவழி கிறிஸ்தவகளை நெஸ்டோரியன் பிரிவை சேர்ந்தவர்கள் என்று பிரித்து பார்த்தார்கள். இது மேற்கத்திய திருச்சபை கோட்பாடுகள் மற்றும் பாரம்பரியங்களில் இருந்து வேறுபட்டதால், தோமாவழி கிறிஸ்தவர்கள் பிரிவினைவாதிகள் என்றும் திரிபு கொள்கை கூட்டத்தார் *(Heretics)* என்றும் முத்திரை குத்தினார்கள். இந்நிலையில் போர்ச்சுகல் மன்னர் முதலாம் மானுவேல் *(Manuel I)*, இந்திய கிறிஸ்தவர்களை அரசியல் ரீதியாக மேற்கத்திய கிறிஸ்தவமுறைக்கு மாற்ற விரும்பினார்.

- <u>ஆடு திருடர்கள் *(Sheep Stealers)*</u>: போர்த்துகீசியர்கள், தோமாவழி கிறிஸ்தவர்களை இலத்தீன் திருச்சபையின் தலைமைத்துவத்திற்குள் கொண்டுவருவதற்காக மேற்கத்திய கிறிஸ்தவர்களின் பழக்க வழக்கங்களையும், பாரம்பரியங் களையும் திருச்சபை கோட்பாடுளையும் ஏற்றுக் கொள்ளும்படி முயற்சியை மேற்கொண்டனர்.

- <u>தோமா வழி கிறிஸ்தவர்களின் ஏமாற்றம்</u>: கிராங்கனூர் பகுதியில் தோமா வழி கிறிஸ்தவர்கள் கடந்த *15* நூற்றாண்டுகளாக வசித்து வந்தார்கள். இந்நிலையில் கிராங்கனூரில் போர்த்துகீசியர்களின் அரசியல் செல்வாக்கு அதிகரித்ததால், தோமா வழி கிறிஸ்தவர்களை வெளியேற கட்டாயப்படுத்தினார்கள். தோமாவழி கிறிஸ்தவர்கள், போர்ச்சுகீசிய கிறிஸ்தவத்தை நிராகரிக்கத் தொடங்கினார்கள்.

அப்போஸ்தலர் தோமாவின் கல்லறையை தேடுதல்

- *மைலாப்பூர்: மைலாப்பூர் கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்பு போர்த்துகீசியர்கள் கேரளாவில் புலிகாட்டு (Pulicat) துறைமுகத்தையே தங்கள் அரசியல் கோட்டையாக பயன் படுத்தினர்கள். மைலாப்பூர், மலபாரிலிருந்து சுமார் 25 நாட்கள் கடற்பயண தூரமாக இருந்தது. கிபி 1517ஆம் ஆண்டில் போர்த்துகீசியர்கள் மைலாப்பூருக்கு வந்து கடற்கரை யோரத்தில் சிலுவையுடன் காட்சியளித்த சிற்றாலயத்தை விசாரித்தபோது அது தோமா அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் கட்டப்பட்டுள்ளதாக அறிந்து கொண்டார்கள்.*
- *அப்போஸ்தலர் தோமாவின் கல்லறை: அப்போஸ்தலர் தோமா கல்லறையின் பாதுகாவலராக 60வயது மதிக்கத்தக்க ஒரு மனிதர் தான், மைலாப்பூர் தோமாவழி கிறிஸ்தவர்களின் பரம்பரையில் இருந்து, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பதாக முஸ்லிம் ஆட்சியாளர்களால், முஸ்லிமாக மதம்மாறியதாகவும் கூறியிருக்கிறார். தன்னுடைய கண் பார்வை குறைவு பாடுகளுக்காக தோமாவிடம் ஜெபித்தபோது குறைபாடுகள் நீங்கிவிட்டதால் அன்றையதினத்லிருந்து ஒவ்வொரு நாளும் சிற்றாலயத்தில் விளக்கு ஏற்றி வருவதாகவும் கூறியுள்ளார்.*
- *தோமாவின் கல்லறை புதுப்பிக்கப்படுதல்: போர்ச்சுக்கல் மன்னராக இருந்த இரண்டாம் இம்மானுவேல் (Manuel II) தோமாவின் கல்லரையை புதுப்பிக்க விரும்பினார். ஆகவே கிபி 1547 ம் ஆண்டு தோமாவின் கல்லறையின் சிதிலமடைந்த அஸ்திவாரங்களை சரிசெய்ய தோண்டும்போது கல்லால் செய்யப்பட்ட ஒரு சிலுவை கண்டுபிடிக்கப்பட்டது. அது இன்றும் மைலாப்பூரின் "அதிசயமான சிலுவை" என்று அழைக்கப்படுகிறது. இந்த சிலுவை கண்டுபிடிக்கப்பட்ட பின்னர்தான் மைலாப்பூரில் அப்போஸ்தலர் தோமாவின் மரணம் குறித்ததான கருத்து வலுபெற ஆரம்பித்தது.*

தமிழ்நாட்டில் பரவர்கள் இன சமூகத்தில் கிறிஸ்தவம்



- <u>பவள முத்து கடற்கரை(*Pearl Fishery Coast*)</u>: பரவர்கள் தமிழ்நாட்டு மீனவ இனத்தை சேர்ந்தவர்கள் ஆவார்கள். இவர்கள் கன்னியாகுமரி முதல் ராமேஸ்வரம் வரை இருந்த கடற்கரை பகுதியில் பவளபாறைகள் மற்றும் முத்துகுளித்தல் போன்ற வர்த்தகத்தின் ஏகபோக (*Monopoly*) உரிமையைக் கொண்டிருந்த அரேபிய முஸ்லிம் வர்த்தகர்களை ஈர்த்தது.

- <u>பரவர்களுக்கு நெருக்கடி</u>: அரேபிய வியாபாரிகள் ஆசியாவில் தரைவழி உலக பொருளாதார வர்த்தக சாலையை (*Silk Road*) கட்டுப்பாட்டில் வைத்திருந்ததோடு, கடல் வர்த்தகத்திலும் ஏகாதிபத்தியம் செலுத்தினார்கள். அரேபிய முஸ்லிம் வியாபாரிகள் முத்து வளம் கொண்ட (*Pearl Fishery Coast*) கடற்கரை பகுதியை தங்கள் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்தார்கள். அரபிய முஸ்லிம் வியாபாரிகளால், பரவர் இன மீனவர்கள் கடும் துன்பத்தையும் பொருளாதார இழப்புகளையும், வாழ்வாதாரங்களையும் இழந்து ஏழைகள் ஆனார்கள். இந்நிலையில் 1532 ஆம் ஆண்டில் பரவர்களுக்கும் முஸ்லீம்களுக்கும் இடையே கடும் சண்டைகள் நடந்தன. இதில் ஏராளமான பரவர் இன மீனவர்கள் கொல்லப்பட்டார்கள்.

- <u>பெருங்கூட்ட மத மாற்றம் (*Mass Conversation*)</u>: பரவர்கள் தங்கள் உயிருக்கும் உடைமைகளுக்கும் உத்திரவாதம் இல்லாத நிலையில், போர்த்துகீசியர்களிடம் முறையிட்டார்கள். இதற்கு, பரவர்களை கிறிஸ்தவர்களாக மதம்மாற வேண்டும் என்று கேட்டுக்கொண்டதை பரவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். ஆகவே கிபி 1535 இல், போர்த்துகீசியர்களின் கடற்படை, அரேபிய முஸ்லிம்களின் கடற்படையை தோற்கடித்தார்கள். இதனால் சுமார் 20,000 க்கும் அதிகமான பரவர் இன மீனவர்கள் கிறிஸ்தவர்களாக மாறினார்கள். இந்நிலையில் கிபி 1537 ஆம் ஆண்டின் இறுதியில் பெரும்பாலான பரவர் இன மீனவர்கள் கிறிஸ்தவத்தை ஏற்றுக்கொண்டார்கள்.

இந்தியாவில் அரேபியர்களின் எழுச்சியும், வீழ்ச்சியும்





- <u>அரேபியர்கள் *Vs* கிறிஸ்தவம்</u>: கிபி *9-12* ம் நூற்றாண்டில் முஸ்லிம் ஆட்சியாளர்கள் ஈராக், ஈரான் பகுதிகளை கைப்பற்றியபோது, அங்கிருந்த கிறிஸ்தவர்கள் கடும் உபத்திரவங்களுக்கு ஆளாக்கப்பட்டார்கள். கிழக்கத்திய திருச்சபைகளுக்கு ஆதரவாக மேற்கத்திய திருச்சபைகள் ஐரோப்பியர்களின் வியாபாரதிற்க்காகவும், புனித பூமியை *(Holy Land)* மீட்கவும் போரிட்டு தோற்றுப்போனார்கள். இதன் மூலமாக மேற்கு ஆசியா மற்றும் கிழக்கு ஆசியா நாடுகளுக்கு இடையிலான உலக வர்த்தக தரைவழி பாதையான *Silk Road* ஐ இஸ்லாமிய ஆட்சியாளர்கள் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டார்கள்.
- <u>அரபு வர்த்தகர்கள்</u>: கிபி *12-16* நூற்றாண்டுகளில் இஸ்லாமிய ஆட்சியாளர்களின் தொடர்ச்சியான வெற்றிகள், அரபு வர்த்தகர்களுக்கு சாதகமாக இருந்தது. இதனால் தென்னிந்தியாவின் துறைமுக பட்டணங்களான புலிக்கோட்டை, நாகப்பட்டினம், கீழக்கரை, காயல்பட்டணம் பகுதிகளில் அரபிய காலனிகளை நிறுவி, ஏகபோக *(Monopoly)* வர்த்தகத்தை கைப்பற்றினார்கள்.
- <u>அரேபியர்களின் வர்த்தகத்தின் வீழ்ச்சி</u>: போர்த்துகீசியர்கள் தங்கள் வலுமையான கடற்படை மூலம், அரபு வர்த்தகர்களின் கடற்படையை முற்றிலுமாக வீழ்ச்சியடையச் செய்தார்கள். இதனால் மிகவும் பொருளாதார வலிமை கொண்ட முஸ்லிம் அரேபிய வியாபாரிகளை இந்தியாவிற்கு வரவிடாமல் தடுத்தார்கள். மேலும் அரேபிய வியாபாரிகள் இந்தியாவில் வர்த்தகம் செய்வதற்கு போர்த்துகீசியர்களின் அனுமதி கட்டாயமாக்கப்பட்டது. இதனால் அரேபிய முஸ்லிம் வியாபாரிகளின் ஏகாதிபத்தியம் முடிவுக்கு வந்தது.

கோவாவில் போர்த்துகீசிய ஆட்சி



- *<u>1).கோவாவில் போர்த்துகீசியம்</u>: கிபி 1498 ல் இந்தியா வந்த போர்த்துகீசியர்கள் கிபி 1510 இல் கோவாவை கைப்பற்றி, தங்கள் அரசியல் கோட்டையாக மாற்றினார்கள். இவர்கள் முதன்மைநோக்கமே காலனி சாம்ராஜ்யத்தை நிறுவுவது அல்ல, மாறாக இலாபகரமான ஏகாதிபத்திய (Monopoly) வர்த்தகத்தின் மீது கட்டுப்பாட்டைப் பெறுவது தான்.*
- *<u>2).போர்த்துகீசிய ஆண்களுக்கான பிரச்சினைகள்</u>: கிபி 16 ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் கோவாவில் சுமார் 2,800 போர்த்துகீசிய குடிமக்களும் சுமார் 3,600 இராணுவ வீரர்களும் இந்தியாவிற்கு வந்தபோது தனியாக வந்ததிருந்தார்கள். இந்நிலையில் போர்ச்சுக்கல் மன்னருக்கு கடிதம் அனுப்பி, போர்ச்சுகீசிய பெண்களை இந்தியாவுக்கு அனுப்பி, அவர்களுக்கென்று தனி காலனிகளை அமைத்துக்கொள்ள கேட்டுக்கொண்டார்கள். இதை மன்னர் மறுக்கவே, அநேக இந்திய அடிமை பெண்கள் போர்த்துகீசிய ஆண்களுக்கு விற்கப்பட்டனர். இவர்களுக்கு பிறந்த குழந்தைகள் முதல் தலைமுறை போர்த்துகீசிய-இந்திய கிறிஸ்தவர்கள் ஆவார்கள்.*
- *<u>3).மத மாற்றம்</u>: போர்த்துகீசியர்கள் கோவா வருவதற்கு முன்புவவரை இங்கு கிறிஸ்தவ சமூகம் இருந்தது இல்லை. இந்நிலையில் கிபி 1517 இல் ரோமன் கத்தோலிக்க பிரான்சிஸ்கன் மிஷனரிகள் கிறிஸ்தவத்தை பரப்புவதற்கு கோவாவுக்கு வந்திரங்கினார்கள். போர்ச்சுகீசியர்கள் கோவாவை கிறிஸ்தவமயமாக்குவதற்கு இந்திய பெண்களை மதமாற்றி Inter-Racial Marriage என்னும் கலப்பின திருமணத்தை ஊக்குவித்தார்கள். அப்படியே இஸ்லாமிய மற்றும் இந்து ஆட்சியாளர்களை ஜெயித்து, இந்து மற்றும் முஸ்லீம் பெண்களை மதமாற்றி போர்த்துகீசியர்களுக்கு திருமணம் செய்து வைத்தார்கள்.*

கோவாவில் போர்த்துகீசிய ஆட்சி



- *4).பரங்கி மார்க்கம்:* இந்தியாவில் உயர்சாதி இந்துக்கள், போர்த்துகீசிய கிறிஸ்தவர்களை பரங்கிகள் என்று அழைத்தனர். ஏனெனில் இவர்கள் சாதீய முறைகளை கடைபிடிக்கவில்லை. மேலும் மாட்டிறைச்சியையும், பன்றி இறைச்சியையும் சாப்பிடுபவர்களாக, மதுபானங்களை குடிப்பவர்களாக, ஒழுக்கமற்ற வாழ்க்கை நடத்துபவர்களாக, இந்திய சமூகத்தில் தீண்டத்தகாதவர்கள் செய்கின்ற காரியமாகவே பார்த்தார்கள். ஆகவே உயர்சாதி இந்துக்கள், வெளிநாட்டு மிஷனரிகளையும், கிறிஸ்தவர்களாக மதம்மாறிய இந்திய கிறிஸ்தர்களையும் பரங்கி மார்க்கத்தார் என்றே அழைத்தார்கள்.

- *5).கோவா மறைமாவட்டம்:* இந்தியாவில் சுமார் 40 ஆண்டுகளில் போர்ச்சுகீசியர்கள் அரசியலிலும் பொருளாதாரத்திலும் மிகப்பெரிய சக்தியாக உருவெடுத்தார்கள். மேலும் ரோமன் கத்தோலிக்க மிஷனெரிகள் மூலம் கிறிஸ்தவம் கோவாவின் எல்லா தீவுகளுக்கும் பரவியது. கிறிஸ்தவர்களாக மதம் மாறியவர்களுக்கு வேலைவாய்ப்புகளும், சலுகைகளும், பாதுகாப்பும் வழங்கப்பட்டன. பல கிராமங்களில் திருச்சபைகளும், சிற்றாலயங்களும் கட்டப்பட்டன. ஆகவே ரோமன் கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்தது. இந்நிலையில் கோவாவில் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை சுமார் 20,000 பேர் இருந்தநினால் போர்த்துகீசிய மன்னர் மூன்றாம் ஜான் முயற்சியினால் கிபி 1533, ஜனவரி 31 ல் இந்தியாவில் முதன்முறையாக இந்தியாவில் ரோமன் கத்தோலிக்க மறைமாவட்டம் கோவாவில் ஏற்படுத்தப்பட்டது. கோவா கிழக்கத்திய நாடுகளின் ரோம் என்று வர்ணிக்கப்படுகிறது.

போர்த்துகீசிய ஆளுகை



- *<u>போர்த்துகீசிய ஆட்சி</u>: கிபி 1505 ம் ஆண்டிலிருந்து வியாபாரத்திற்கு வந்த போர்த்துகீசிய நிறுவனங்கள் அதிகமாக ஆரம்பித்தன. கிபி 1514 ல் போர்த்துகீசிய மன்னர் இந்தியாவிற்கு ஒரு ஆளுநரை நியமித்தார். பின்னர் 1524 ஆம் ஆண்டில் வாஸ்கோட-காமா இந்தியாவின் இரண்டாவது வைஸ்ராயாக (Vaiceroy of India) மூன்றாவது முறையாக இந்தியா வந்தார்.*
- *<u>சலுகைகள் (Padroado)</u>: கிபி 1514 ஆம் ஆண்டில் போப்பாண்டவர் பத்தாம் லியோ, கிறிஸ்தவத்தை காலனி நாடுகளில் பரப்பும்போது அங்கு கிறிஸ்தவ திருச்சபைகளை கட்டுவதற்கும், துறவியர் மடங்களுக்கும், மிஷனெரிகளுக்கும், மதம் மாறும் கிறிஸ்தவர்களுக்கும் சலுகைகள், பாதுகாப்பும் கொடுப்பதாகும். இது Padroado என்று அழைக்கப்படுகிறது.*
- *<u>விசாரணை அமைப்பு (Inquisition)</u>: கிபி 1517 ல் இருந்து ஐரோப்பாவில் ரோமன் கத்தோலிக்க திருச்சபையில் பிரிவினை ஏற்பட்டு சீர்திருத்த திருச்சபைகள் உண்டாக ஆரம்பித்ததால், ரோமன் கத்தோலிக்க தலைமைத்துவத்தை ஏற்க மறுப்பவர் களை தண்டிப்பதற்காக போப்பாண்டவர் Inquisition என்ற விசாரணை அமைப்பை அறிவித்தார். இதை போர்த்துகீசிய அரசாங்கம் கோவாவிலும், கேரளாவிலும் அமல்படுத்தினார்கள்.*
- *<u>போர்த்துகீசியர்களின் அட்டுழியம்</u>: ரோமன் கத்தோலிக்க மதகுருமார்கள் தங்கள் காலனி அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் ரோமன் கத்தோலிக்க இலக்கியங்களை (Literatures) தவிர, சமஸ்கிருதம், மராத்தி அல்லது கொங்கனி மொழியில் எழுதப்பட்ட எல்லா புத்தகங்களையும் எரித்தார்கள். இந்துக்கள், முஸ்லிம்கள், யூதர்கள் மற்றும் தோமாவழி கிறிஸ்தவர்களையும் ரோமன் கத்தோலிக்கர்களாக மதமாற்றம் செய்ய கட்டாயப்படுத்தினார்கள். இதை எதிர்த் தவர்களை கைதுசெய்து துன்புருத்தி, பலரை அநியாயமாய் தூக்கிலிடப்பட்டார்கள்.*

பரவர்களிடையே பிரான்சிஸ் சேவியரின் நற்செய்திபணி

- *1).பிரான்சிஸ் சேவியர்: இவர்தான் இந்தியாவின் முதல் ரோமன் கத்தோலிக்க ஜேசுட் மிஷனரி ஆவார். இவர் கிபி 1542 இல் போர்ச்சுகல் பகுதியில் இருந்து கோவா வந்து, அங்கு மூன்று ஆண்டுகள் கிறிஸ்தவத்தை பரப்பிவிட்டு தமிழகத்திற்கு வந்தார்.*
- *2).தமிழ்நாட்டில் நற்செய்திபணி: கிபி 1535 ல் கிறிஸ்தவத்தை ஏற்றுக்கொண்ட பரவர் இன மீனவர்கள், காலபோக்கில் போர்த்துகீசிய கிறிஸ்தவ பெயர்களைக் கொண்டிருந்தாலும் இந்துக்களாகவே வாழ்ந்து வந்தார்கள். ஆகையினால் கிபி 1535 - 42க்கு இடையில் பிறந்த பரவர் இன பிள்ளைகளுக்கு ஞானஸ்நானமும் கொடுக்கப்படவில்லை. ஆகவே பிரான்சிஸ் சேவியர் கன்னியாகுமரி முதல் ராமேஸ்வரம் வரை சுமார் மூன்று வருடங்கள் நற்செய்திபணி செய்து சுமார் 40,000 பரவர்கள் கிறிஸ்தவ மதத்தை ஏற்றுக்கொள்ள செய்து, திருச்சபைகள்,சிற்றாலயங்கள் கட்டி ஆயர்களை நியமித்தார்.*
- *கேரளாவில் நற்செய்திபணி: கிபி 1548ஆம் ஆண்டில், பிரான்சிஸ் சேவியர், கேரளாவின் மலபார் கடற்கரை மீனவர்களிடைய மூன்று ஆண்டுகள் நற்செய்திபணி செய்து சுமார் 10,000 முக்குவர் இன மீனவர்களை கிறிஸ்தவராக்கினார். அப்படியே கிபி 1549 ம் ஆண்டு கேரளாவில் தன்னூர் சமஸ்தான மன்னர், பிரான்சிஸ் சேவியர் மூலமாக கிறிஸ்தவரானார். மன்னரை பின்பற்றி அவருடைய ஆரவாளர்களும் அநேகர் கிறிஸ்தவர்களானார்கள்.*
- *4)தோமாவழி கிறிஸ்தவர்களிடம்: கிராங்கனூரில் தோமா வழி கிறிஸ்தவர்களை, ரோமன் கத்தோலிக்க கிறிஸ்தவத்திற்குள் கொண்டுவரும் நோக்கத்துடன் பிரான்சிஸ் சேவியர் செயல்பட்டார். இதற்காக கொச்சியில் வேதாகம கல்லூரியை ஏற்படுத்தி, அதில் இந்திய மக்களுக்கு நற்செய்திபணி அறிவிக்க ஆயர்களை உறுவாக்கினார். பிரான்சிஸ் சேவியர் காலத்தில் பல திருச்சபைகளும், சிற்றாலயங்களும் ஏற்படுத்தப்பட்டன.*

பரவர்களிடையே பிரான்சிஸ் சேவியரின் நற்செய்திபணி

- *<u>5).கோவாவில் நற்செய்திபணி</u>: பிரான்சிஸ் சேவியர் அவர்கள் கால்நடையாய் நடந்து சென்று நற்செய்திபணி அறிவித்து கிறிஸ்தவர்களானவர்களுக்கு நிசேயா விசுவாச பிரமாணம், 10 கற்பனைகள், பொதுவான பாவ அறிக்கை ஜெபம் மற்றும் கர்த்தர் கற்றுக்கொடுத்த ஜெபத்தை கற்றுக்கொடுத்தார். நன்றாக மனப்பாடம் செய்த சிறுவர்கள் மூலம் அவர்கள் பெற்றோருக்கு நற்செய்திபணி அறிவிக்க செய்து அவர்களுக்கு இயேசு கிறிஸ்துவை பற்றி இரண்டு ஆண்டுகள் நற்செய்திபணி செய்ததில் அநேக மக்கள் இயேசுவை ஏற்றுக்கொண்டார்கள்.*

- *<u>6).வேதாகம கல்லூரி</u>: பிரான்சிஸ் சேவியர் மீண்டும் கிபி 1551 ல் கோவா சென்று இந்திய ஆயர்களை உறுவாக்குவதற்காக St. Paul வேதாகம கல்லூரியை ஏற்படுத்தி, வேதாகமத்தை கற்றுகொடுத்து அநேக ஆயர்களை உறுவாக்கி, அவர்கள் மூலம் இந்தியாவில் ரோமன் கத்தோலிக்க கிறிஸ்தவம் பரவ செய்தார்.*

- *<u>7).சீனாவில் பிரான்சிஸ் சேவியர்</u>: பிரான்சிஸ் சேவியர் அவர்கள் சீன தேசத்திற்கு எப்படியும் கிறிஸ்துவின் நற்செய்திபணியை கொண்டு செல்ல வேண்டும் என்ற வாஞ்சை அதிகமாக இருந்தது. கிபி 1552ஆம் ஆண்டில் கோவாவிலுள்ள தனது சக ஜேசுயிட்டு மிஷனெரிகளிடமிருந்து விடைபெற்று கொண்டு, நெடும் கடல் பயணத்தின் மூலமாக சீனாவுக்கு சென்று கொண்டிருந்தபோது கொடிய விஷ காய்ச்சல் இவரை தாக்கியது. மேலும் சீனாவிற்குள் நுழையும் அனுமதியும் மறுக்கப்பட்டதால் சீனாவுக்கு 40 மைல் கிழக்கே சான்சியன் என்ற தீவில் இறக்கப்பட்டார். அங்கு விஷக்காய்சலில் மரித்துப்போனார். பின்னர் அவரது உடல், கோவாவிற்கு கொண்டுவரப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகிறது. பிரான்சிஸ் சேவியர், இந்தியாவின் இரண்டாவது அப்போஸ்தலன் என்று ரோமன் கத்தோலிக்கர்களால் மரியாதை செய்யப்படுகிறார்.*

Robert-De-Nobile(1577-1656)
இராபர்ட்-டி- நோபிலி நற்செய்திபணி

- *<u>1).பரங்கி மார்க்கம்</u>: இவர் ரோமன் கத்தோலிக்க ஜேசுட் மிஷனரியாக கிபி 1608 இல் இத்தாலியிலிருந்து கோவா வழியாக மதுரைக்கு வந்தார். அங்கு உயர் சாதி இந்துக்கள் ரோமன் கத்தோலிக்க மிஷனரிகளையும் பரங்கிகள் என்று அழைத்தனர். ஏனெனில் கிறிஸ்தவர்கள் சாதீய முறையை கடைபிடிக்காததாலும், மேலும் மாடு மற்றும் பன்றி இறைச்சியையும் சாப்பிடுபவர்களாக இருந்ததால் கிறிஸ்தவத்தை ஏற்றுக்கொண்ட எல்லோரையும் பரங்கி மார்க்கத்தை சேர்ந்தவர்கள் என்றே அழைத்தார்கள்.*
- *<u>2கலாச்சார உள்வாங்குதல் (Inculturation)</u>: இராபட்-டி-நொபிலி, கிறிஸ்தவம் மேற்கத்திய கலாச்சாரத்தை விட்டுவிட்டு, இந்திய கலாச்சாரத்தை உள்வாங்கி, இந்தியர்களுக்கு நற்செய்தி அறிவித்தால் மாத்திரமே இந்தியாவில் கிறிஸ்தவம் வளரும் என்பதை புரிந்து கொண்டார். ஆகவே நோபிலி, கிறிஸ்துவின் நற்செய்தியை பரப்புவதற்கு, இந்திய கலாச்சார உள்வாங்குதலுக்கு (Inculturation) அடித்தளமிட்டார். இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை உயர்சாதினருக்கு அறிவிக்க, தான் அணிந்திருந்த கருப்பு நிற நீண்ட அங்கிக்கு (Black Cassak) பதிலாக காவியுடை அணிந்து, தலையை மளித்துக்கொண்டு அதில் குடுமியை வைத்துக்கொண்டு, பூணூல் அணிந்துகொண்டு அதில் ஒரு சிலுவையையும் வைத்துக்கொண்டு, நெற்றியில் செந்நிற பட்டை வைத்து, தோல் காலணிக்கு பதிலாக மர செருப்பையும் அணிந்து கொண்டு தன்னை ஒரு கிறிஸ்தவ சந்நியாசியாக மாற்றிக்கொண்டார். இப்போது நொபிலி, தன்னை ஒரு ரோமானிய பிராமணர் என்று அழைத்துக் கொண்டு மதுரையில் ஒரு ஆசிரமத்தை ஏற்படுத்தினார். மேலும் புலால் உணவை உண்பதை முழுவதுமாக விட்டுவிட்டு, மரக்கறிகள் உணவையே உட்கொண்டு, நற்செய்திபணியை செய்தார்.*

Robert-De-Nobile(1577-1656)
இராபர்ட்-டி- நோபிலி நற்செய்திபணி



- *ஐந்தாவது வேதம்:* நொபிலி சுவிசேஷத்தை அறிவிப்பதற்காக இந்துக்களின் புனித நூல்களான வேதங்கள், உபநிடதங்கள் யாவையும் கற்றுகொண்டு, யூதர்களுக்கு யூதனைபோலவும் கிரேக்கர்களுக்கு கிரேக்கரை போலவாறு பிராமணர்களுக்கு அவர்கள் கலாச்சாரத்தின்படி அதிகாலையில் குளித்து; சம்மணமிட்டு அமர்ந்து, தன்னை ஒரு இந்திய சன்னியாசியாக காட்டிக்கொண்டார். இந்துக்களின் நான்கு வேதங்களில் இருந்து (ரிக், யஜூர், சாம, அதர்வணம்) சில சுலோகங்களை பிரித்தெடுத்து, இயேசுவின் போதனைகளை ஐந்தாம் வேதம் என்றும், இந்து வேதங்களில் சொல்லப்பட்ட பிரஜாபதி என்பவர் இயேசுவே என்றும், கிறிஸ்தவமே இந்திய வேதங்களின் மணிமகுடம் என்றுகூறி நற்செய்தி அறிவித்தார்.
- *4).நற்செய்தி வழிமுறைகள்:* உருவ வழிபாடு காரியங்களை தவிர்த்து இந்திர்களின், உணவு, உடை, கலாச்சாரம் மற்றும் பழக்கவழக்கங்களை மாற்றத் தேவையில்லை என்று வலியுறுத்தினார். 5 வருட நற்செய்திபணி மூலமாக சுமார் 1,200 உயர் சாதி பிராமணர்கள் கிறிஸ்தவர்களாக மாறினார்கள். பின்னர் சேலம், திருச்சி மற்றும் மொரமங்கலம் பகுதியிலும் கிறிஸ்தவத்தை பரப்பினார். 1625 ம் ஆண்டு கிறிஸ்துமஸ் தினத்தன்று சேந்தமங்கலத்தின் மன்னர் திருமங்கல நாயக்கர், அவருடைய தாய், மனைவி மற்றும் பிள்ளைகள் யாவரும் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார்கள்.
- *5).இந்திய இறையியல் தந்தை:* ஒரு மிஷனரியாக வந்த நோபிலி, 1656 இல் 30,000 பேராக இருந்த கிறிஸ்தவர்கள் எண்ணிக்கை 1706 ஆண்டில் 1, 00,000 க்கும் அதிகமாய் இருந்தது. இராபர்ட்-டி-நோபிலி, இந்திய கிறிஸ்தவ இறையியலின் தந்தை என்றும் பிராமணர்களின் அப்போஸ்தலன் என்றும் அழைக்கப்படுகிறார்.

முகலாய பேரரசில் ரோமன் கத்தோலிக்க நற்செய்திபணி







<u>பேரரசர் அக்பர்</u>: வட இந்தியாவில் முகலாய பேரரசர் அக்பர் (கிபி 1556-1605), கிறிஸ்தவ மதத்தைப்பற்றி அறிந்துகொள்ள ரோமன் கத்தோலிக்க ஜெசுட் மிஷனரிகளை கோவாவிலிருந்து டெல்லிக்கு வரும்படி வாஞ்சையோடு அழைத்தார். பேரரசர் அக்பரின் அழைப்பின் பேரில், 3 ரோமன் கத்தோலிக்க ஜெசுட் மிஷனரிகள் பிப்ரவரி 1580 இல் அக்பர் அரண்மனைக்கு சென்றார்கள்.

<u>முகலாயர்களிடம் நற்செய்தி பணி</u>: ரோமன் கத்தோலிக்க மிஷனெரிகள் மூலம் கிறிஸ்தவத்தை தெரிதுகொண்ட அக்பர் அவர்களிடம் கிறிஸ்துவின் நற்செய்திபணியை செய்யவும், மதமாற்றம் செய்யவும் முழு சுதந்திரத்தை கொடுத்தார். அக்பர் இஸ்லாம் மதத்தின் மீது கொண்ட வெறுப்பினால், கிறிஸ்தவராக மாறிவிடுவார் என்று மிஷனெரிகள் எதிர்பார்த்திருந்தார்கள், ஆனால் கிறிஸ்தவரக மாறவில்லை.

<u>முகலாய பேரரசில் கிறிஸ்தவம்</u>: முகலாய பேரரசில் ரோமன் கத்தோலிக்க மிஷனரிகள் கிறிஸ்தவத்தை பரப்பி, அரண்மனையில் ஒரு பாடசாலையையும் நிறுவினார்கள். இதில் அரசாங்க பிரபுக்களின் பிள்ளைகளும், அரச குடும்ப பிள்ளைகளுக்கும் உயர் கல்வி கற்று கொடுக்கப்பட்டதோடு, கிறிஸ்தவ நற்செய்தியும் அறிவிக்கப்பட்டது. இந்நிலையில் 16ஆம் நூற்றாண்டின் இறுதியில், ஆக்ரா, டெல்லி, லாகூர் மற்றும் பாட்னாவில் ரோமன் கத்தோலிக்க ஜேசுயிட் மிஷனெரிகள் பல திருச்சபைகளையும் சிற்றாலயங்களையும் நிறுவினார்கள்.

<u>வட இந்தியாவில் கிறிஸ்தவத்தின் வீழ்ச்சி</u>: அக்பரின் ஆட்சிக்கு பின்னர் வந்த இஸ்லாமிய பேரரசர்கள், மத சகிப்புத்தன்மை இல்லாதவர்களாக இருந்ததால் கிறிஸ்தவர்களுக்கு எதிரான வன்முறையை கட்டவிழ்த்து, வாள் முனையில் கிறிஸ்தவர்களாக மாறியவர்களை, முஸ்லிம்களாக மாற்றினார்கள். இதனால் வட இந்தியாவில் கிறிஸ்தவம் வீழ்ச்சியடைய ஆரம்பித்தது.

தோமா வழி மற்றும் பேதுரு வழி கிறிஸ்தவ மோதல்





- <u>*கிறிஸ்தவர்களுக்கு இடையிலான பிளவு*</u>*: கிபி 1516 ம் ஆண்டுமுதல் ரோமன் கத்தோலிக்க மிஷனரிகள், தோமா வழி கிறிஸ்தவர்கள் மீது ஆதிக்கம் செலுத்தி அவர்களை ரோமன் கத்தோலிக்க கிறிஸ்தவர்களாக மாற்ற ஆரம்பித்ததிலிருந்து, பிரிவினைகள் படிப்படியாக வளர ஆரம்பித்தன.*

- <u>*முறிந்துபோன உறவு*</u>*: போர்த்துகீசிய ரோமன் கத்தோலிக்க மிஷனெரிகள், இலத்தீன் கிறிஸ்தவமே உண்மையான கிறிஸ்தவம் என்றும் நெஸ்டோரியன் பிரிவு கிறிஸ்தவம் திரிபு கொள்கை (Heretics) கூட்டத்தார் என்று போதித்தார்கள்.*

- <u>*மேற்கத்திய திருச்சபையின் கருத்துக்கள்*</u>*: சிரியன்-பெர்சிய திருச்சபையானது நெஸ்டோரியர் பிரிவைசாந்த கிறிஸ்தவமாக கிபி 5 ம் நூற்றாண்டுமுதல் இருந்து வந்தது. இந்த சபை பிரிவை கிபி 431, மற்றும் கிபி 451ஆம் ஆண்டு நடைபெற்ற Ephesus மற்றும் Chalcedon திருச்சபை மன்றம் திரிபு கொள்கை கூட்டத்தார் (Heretics) என்றும் பிரிவினைவாதிகள் (Schematics) என்றும் அறிவித்திருந்தார்கள். இதற்காக தோமா வழி கிறிஸ்தவர்கள், கிழக்கத்திய பெர்சிய திருச்சபைகளோடு கொண்டுள்ள ஐக்கியத்தையும் பாரம்பரியங்களையும் வழிபாட்டு முறைகளையும் நிராகரிக்க வேண்டும் என்று ரோமன் கத்தோலிக்க மிஷனெரிகள் கேட்டுக்கொண்டார்கள்.*

- <u>*போர்த்துகீசிய அதிகாரம்*</u>*: கிபி 16 ம் நூற்றாண்டில் போர்ச்சுக்கல் மன்னர் முதலாம் மானுவல், இந்தியாவில் தோமா வழி கிறிஸ்தவர்களை, ரோமன் கத்தோலிக்க திருச்சபையின் தலைமையின்கீழ் கொண்டுவருவதற்காக, ரோமன் கத்தோலிக்க இலத்தீன் ஆராதனை முறைமையையும் பாரம்பரியங்களையும், கோட்பாடுகளையும் பின்பற்ற செய்ய வேண்டும் என்று விரும்பினார். இதற்கான செயல்முறை திட்டங்களை வகுக்க அதிகாரம் கொடுத்தார்.*

மேற்கத்திய மற்றும் கிழக்கத்திய திருச்சபை தலைவர்களின் உறவுகள்

- <u>நண்பர்கள்</u>: கிபி 8-12 ம் நூற்றாண்டில் உலக அளவில் ஏற்பட்ட இஸ்லாமியத்தின் வளர்ச்சியும், இஸ்லாமிய ஆட்சியாளர்களின் செல்வாக்கும், மற்றும் புனித பூமியை மீட்க (Holy Land) இஸ்லாமியர்களுக்கு எதிரான கிறிஸ்தவர்கள் நடத்திய சிலுவைப்போர்கள், உலக கிறிஸ்தவத்தில் கிழக்கத்திய மற்றும் மேற்கத்திய திருச்சபைகளின் நெருக்கமான ஐக்கித்திற்கு வழிவகுத்தது.
- <u>மார் ஜேக்கப் (Mar Jacob)</u>: இவர் நாற்பதாயிரத்துக்கும் மேற்பட்ட தோமா வழி கிறிஸ்தவர்களுக்கு கிழக்கத்திய-சிரியன் திருச்சபை பேராயராக இருந்தார். பேராயர் மார் ஜேக்கப் திருச்சபையின் ஒற்றுமைக்காக, சில காரியங்களில் ரோமன் கத்தோலிக்க மிஷனெரிகளோடு சமரசம் செய்துகொண்டார். ரோமன் கத்தோலிக்க மிஷனெரிகனின் நற்செய்தி பணியையும், வேதாகம அறிவையும், பிற இனத்தாருக்கு நற்செய்திபணி செய்வதையும் பாராட்டினார். தோமா வழி கிறிஸ்தவர்கள் கிராங்கனுரரில் வேதாகம கல்லூரியில் வேதாகமத்தை கற்றுக்கொள்ள அனுமதித்தார்.
- <u>சலுகைகள்</u>: போர்ச்சுகல் மன்னர் இரண்டாம் மானுவேல், கேரளாவில் சீரியன் பேராயர் மார் ஜேக்கப்க்கு, போர்த்துகீசிய அரசாங்கத்தின் சலுகைகளையும், உதவிகளையும் பெற்றுக் கொள்ளும்படி வற்புறுத்தி, இந்தியாவில் கிறிஸ்தவம் பரவுவதற்கு இணைந்து செயல்பட அழைப்பு கொடுத்தார். போர்ச்சுகீசிய மதகுருமார்களின் சூழ்ச்சியை அறியாமல் மார் ஜேக்கப், அவர்களின் நிதி உதவிகளையும், சலுகைகளையும் பெற்றுக்கொண்டார். இந்நிலையில் பேராயர் மார் ஜேக்கப், தான் இறக்கும் வரை தோமா வழி கிறிஸ்தவர்களுக்கு பேராயராக இருந்து கிபி 1552 ல் மரித்தார்.

முதல் ரோமன் கத்தோலிக்க பிரதம பேராயர் வருகை



- *சிரியன் பேராயர் மார் ஆபிரகாம் மரணம்:* தோமா வழி கிறிஸ்தவர்களை, ரோமன் கத்தோலிக்க தலைமைத்துவத்தின் கீழ் கொண்டுவருவதற்கு பெர்சியா பேராயர்கள் தடையாக இருப்பதாக, போர்த்துகீசிய ரோமன் கத்தோலிக்க மதகுருமார்கள் கருதினார்கள். ஆகவே சிரியன் பேராயர் மார் ஜேக்கப் மரணத்திற்குப்பின் பெர்சியாவிலிருந்து வரும் பேராயர்களை போர்த்துகீசிய கடற்படை தடுத்து நிறுத்தியது. இப்படி செய்யும்போது, தோமா வழி கிறிஸ்தவர்கள் சீரியாவின் ஆயர்கள் மற்றும் பேராயர்கள் இல்லாமல் இறுதியில் ரோமன் கத்தோலிக்க திருச்சபையின்கீழ் வந்துவிடுவார்கள் என்று கருதினார்கள். இந்நிலையில் தோமா வழி கிறிஸ்தவர்களின் கடைசி கிழக்கு-சிரியா-பெர்சியா பேராயர் மார் ஆபிரகாம் கிபி 1597 இல் மரித்தார்.

- *பிரதம பேராயர் அலெக்ஸ்-டி-மென்ஸிஸ்:* 16 ம் நூற்றாண்டில் ரோமன் கத்தோலிக்க திருச்சபையானது போர்த்துகீசியர்கள் மூலமாக வேகமாக இந்தியாவில் வளர்ச்சியடைந்தது. இந்நிலையில் முதல் ரோமன் கத்தோலிக்க பிரதம பேராயராக அலெக்ஸ்-டி-மென்ஸஸ் இந்தியா வந்தார். இவர் கோவா வந்த சில மாதங்களுக்குள், தன்னுடைய செயல்பாடுகளால் போர்ச்சுகீசியர்களின் ஆளுகைக்கு உட்பட்ட எல்லா சிற்றரசர்களின் நம்பிக்கையையும் பெற்றார். இந்தியாவில் உள்ள எல்லா கிறிஸ்தவர்களும், ஆயர்களும், பேராயர்களும் தன் உத்தரவிற்கு கட்டுப்பட்டவர்கள் என்று கூறி, நம்பவைத்தார். இதை எதிர்க்கும் கிறிஸ்தவர்களையும் ஆயர்களையும், பேராயர்களையும் கைது செய்யும் அதிகாரத்தை போப்பாண்டவர் கொடுத்துள்ளதாகவும் கூறினார். இந்திய கிறிஸ்தவத்தில் நினைவுகளில் அலெக்ஸஸ்-டி-மென்ஸிஸ், ஐரோப்பிய ஏகாதிபத்திய வில்லனின் அடையாளமாக கருதப்படுகிறார்.

டயம்பர் திருச்சபை மன்ற நிகழ்வு *(Synod of Daimper)*




THE
HISTORY
OF THE
Church of *Malabar*,
FROM
The time of its being first discover'd by the *Portuguezes* in the Year 1501.
Giving an Account of
The *Persecutions* and Violent *Methods* of the *Roman Prelates*, to Reduce them to the Subjection of the *Church* of *ROME*.
Together with the
SYNOD of DIAMPER,
Celebrated in the Year of our Lord 1599.
With some *Remarks* upon the *Faith* and *Doctrine* of the *Christians* of St. *Thomas* in the *Indies*, agreeing with the *Church* of *England*, in opposition to that of *Rome*.
Done out of Portugueze *into* English.
By *MICHAEL GEDDES*, Chancellor of the Cathedral Church of *SARUM*.
LONDON,
Printed for *Sam. Smith*, and *Benj. Walford*, at the *Prince's-Arms* in St. *Paul's Church-Yard*, 1694.

- *<u>1).பொதுக்குழு கூடுகை</u>: ரோமன் கத்தோலிக்க பிரதம பேராயர் அலெக்சிஸ்-டி-மென்ஸிஸ் கிபி 1599 இல் கேரளாவின் மலபார் பகுதிக்கு சென்றார். இவர் தோமா வழி கிறிஸ்தவர்கள் எல்லோரையும், போப்பாண்டவரின் தலைமைத்துவத்தின்கீழ் கொண்டுவர விரும்பினார். இந்நிலையில் பேதுரு வழி மற்றும் தோமா வழி கிறிஸ்தவத்திற்கும் இடையிலான இறையியல் வேறுபாடுகள், கோட்பாடுகள், பாரம்பரியங்கள் மற்றும் ஆராதனை முறைமைகளிலுள்ள வேறுபாடுகளை தீர்ப்பதற்காக 1599 ஜூன் 20 அன்று டயம்பர் திருச்சபை மன்றத்தை (Synod of Diamper) ஏற்பாடு செய்தார். இதற்காக மென்ஸிஸ் தன்னுடைய அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி, தோமாவழி கிறிஸ்தவர்களுக்கு சீரியன் பேராயர் இல்லாதநிலையில், தலைமை பொறுப்பில் இருந்த Archdeacon ஜார்ஜ் தாமஸ் ஒப்புதலையும் பெற்றார்.*
- *<u>2).டயம்பர் திருச்சபை மன்றம்</u>: அலெக்சிஸ்-டி-மென்ஸிஸ் தலைமையில் தோமா வழி மற்றும் ரோமன் கத்தோலிக்க திருச்சபையிலிருந்து, 152 ஆயர்களும் மற்றும் 662 திருச்சபை பிரதிநிதிகளும் மற்றும் Archdeacon ஜார்ஜ் தாமஸ கலந்து கொண்டார்கள். இதில் மென்ஸிஸ் தோமாவழி கிறிஸ்தவ தலைவர்களையும் ஆயர்களையும் ரோமன் கத்தோலிக்க தலைமைத்துவத்தை ஏற்றுக்கொள்ளும்படி போர்த்துகீசிய அதிகார கட்டளைகளை கவனமாக தயாரித்து வைத்திருந்தார். இந்த கூடுகையில் மென்ஸிஸ் தலைமையிலான கூட்டத்தார், கதவை மூடிக்கொண்டு தோமாவழி கிறிஸ்தவ தலைவர்களை கத்திமுனையில், பயங்கர ஆயுதங்களைக்கொண்டு அச்சுறுத்தி, 267 கட்டளைகளுக்கு ஒப்புதல் கையெழுத்துக்களை பெற்றுக்கொண்டார்கள். இதற்கு அத்தாட்சியாக போர்த்துகீசிய ஆளுநரும், அரசாங்க அதிகாரியும், அலெக்ஸ்-டி-மென்ஸிசும் கையெழுத்திட்டார்கள்.*

டயம்பர் திருச்சபை மன்ற நிகழ்வு (*Synod of Daimper*)



- *3).திருச்சபை மன்ற முடிவுகள்:* இந்த திருச்சபை மன்ற முடிவின்படி கிழக்கத்திய-சிரிய-பெர்சிய ஆயர்களும், பேராயர்களும் கிறிஸ்தவத்தில் பிரிவினைகளை ஏற்படுத்துகிறவர்கள் என்றும் திரிபு கொள்கைகாரர்கள் (Heretics) என்றும் அறிவிக்கப்பட்டார்கள். இதனால் நெஸ்டோரியர் கருத்துக்கள் அடங்கிய பல சிரியாக் புத்தகங்கள், கோட்பாடுகள், வேதாகம விளக்க உரைகள் யாவற்றையும் தீயிலிட்டு எரித்தார்கள். இப்போது சிரியாக் ஆராதனை முறைமைகள் இலத்தீன் முறையாக மாற்றப்பட்டது. இறுதியாக, தோமா வழி கிறிஸ்தவர்கள், ரோமன் கத்தோலிக்க தலைமைக்கு கொண்டுவரப்பட்டார்கள். தோமாவழி கிறிஸ்தவ திருச்சபைகள் யாவும் ரோமன் கத்தோலிக்க திருச்சபைகளோடு இணைக்கப்பட்டு ஒவ்வொரு திருச்சபைக்கும் ரோமன் கத்தோலிக்க ஆயர்கள், அவர்களுக்கு பொறுப்பாக பேராயரும் நியமிக்கப்பட்டார்கள். இது மலபார் திருச்சபை வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. மலபாரில் சூயாதீன இயங்கிய தோமா வழி கிறிஸ்தவ திருச்சபைகளின் பாரம்பரியங்கள் மறைய ஆரம்பித்தது.

- *4).கைது நடவடிக்கைகள்:* பெர்சிய ஆயர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டு ரோமன் கத்தோலிக்க தலைமையை ஏற்றுக்கொள்ள உத்தரவு பிறப்பிக்கப் பட்டது. இதை ஏற்றுகொள்ளாதவர்கள் பெர்சியாவுக்கு அனுப்பி வைக்கப் பட்டார்கள். மேலும் அங்கிருந்து பேராயர்கள் யாரும் மலபார் பகுதிக்கு வரவிடாமல் பார்த்துக்கொண்டார்கள். மாறுவேடத்தில் வந்த ஆயர்களும் பெரயர்களும் போப்பாண்டவரின் Inquisition என்ற விசாரணையின் அமைப்பின்கீழ் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டு, நாடு கடத்தப்பட்டு, டார்கள் அல்லது ரோமன் கத்தோலிக்க மதத்தை தழுவ கட்டாயப்படுத்தப்பட்டார்கள்.

டயம்பர் திருச்சபை மன்ற முடிவின் எதிர் விளைவுகள்





- *எதிர் விளைவுகள்:* டயம்பர் திருச்சபை மன்ற முடிவுகள் தோமாவழி கிறிஸ்தவர்களிடைய கடும் கோபத்தை ஏற்படுத்தியது. ஆங்காங்கே போராட்டங்கள் நடைபெற்றாலும் போர்த்துகீசிய அரசாங்கம் போராட்டத்தை அடக்கியது.
- *சீரியா பேராயருக்கு கடிதம்:* டயாம்பர் திருச்சபை மன்ற முடிவுகள் நடைபெற்று சுமார் 50 ஆண்டுகள் கடந்த நிலையில், தோமா வழி கிறிஸ்தவர்கள், சிரியாவில் இருந்த நெஸ்டோரிய பேராயர்களுக்கு கடிதம் அனுப்பி, மலபார் பகுதிக்கு ஒரு பேராய அனுப்புமாறு கோரிக்கை விடுத்தார்கள். இவர்களின் வேண்டுகோளை ஏற்று சிரியா பேராயர் அகத்தாலாவை, கிபி 1662 ல் மலபாருக்கு கப்பலில் அனுப்பி வைத்தார்கள்.
- *பேராயர் கைது:* மலபார் பகுதிக்கு வந்து கொண்டிருந்த பேராயர் அகத்தாலாவை ரோமன் கத்தோலிக்க மதகுருமார்களின் உத்தரவின்படி போர்த்துகீசிய கடற்படை மைலாப்பூரில் கைது செய்து, சங்கிலிகளால் கட்டி, வேறோரு கப்பல் மூலமாக கோவா செல்லும் வழியில், கப்பல் கொச்சியில் நின்றது.
- *மரணதண்டனை:* பேராயர் அகத்தாலா கைதை அறிந்துகொண்ட தோமா வழி கிறிஸ்தவர்கள் சுமார் 25,000 க்கும் Archdeacon தாமஸ் ஜார்ஜ் தலைமையில் கொச்சி சென்று விடுதலை செய்யும்படியாக போராட்டம் நடத்தினார்கள். இதை தடுப்பதற்காக கொச்சி துறைமுகம் மூடப்பட்டது. ஆகவே அவர்கள் கொச்சி மறைமாவட்ட ரோமன் கத்தோலிக்க பேராயரை சந்திக்க சென்றார்கள்; அங்கு அனுமதி மறுக்கப்பட்டது. இந்நிலையில் சிரியா பேராயர் அகத்தல்லா கடலில் மூழ்கடிக்கப்பட்டு கொல்லப்பட்டதாக மலபார் பகுதி முழுவதும் செய்தி காட்டுதீயாக பரவியது. அதற்கு போர்த்துகீசிய அரசாங்கம், பேராயர் அகத்தாலா நீரில் மூழ்கி இறந்துவிட்டார் என்று கூறி சமாளிக்க முயன்றது.

வளைந்த சிலுவை உறுதிமொழி (Coonan Cross Oath)

- *வளைந்த சிலுவை:* சிரியா பேராயர் மார் அகத்தல்லா கொல்லப்பட்டதால் ரோமன் கத்தோலிக்க நிர்வாகத்திற்கு எதிரான கிளர்ச்சியில் தோமா வழி கிறிஸ்தவர்கள் கொச்சியில் ஈடுபட்டார்கள். ஆகவே சுமார் 25,000 தோமாவழி கிறிஸ்தவர்கள் ஜனவரி 3, 1563 அன்று கொச்சியில் மட்டஞ்சேரியில் இருந்த Our Lady ஆலயத்திற்கு முன்பதாக ஒன்று கூடி அங்கிருந்த சிலுவையில் கயிற்றைக்கட்டி அதைப்பிடித்தவாறே ஒரு உறுதிமொழி எடுத்துக் கொண்டார்கள். பாரம்தாங்காமல் சிலுவை சற்று வளைந்து விட்டதால் Coonan Cross என்று அழைக்கப் படுகிறது.
- *வளைந்த சிலுவை உறுதிமொழி:* தோமா வழி கிறிஸ்தவர்கள் அனைவரும் இனிமேல் ரோமன் கத்தோலிக்க திருச்சபை தலைமைத்துவத்தை நிராகரிப்பதாகவும், கிழக்கத்திய திருச்சபைகள் அனுப்பும் பேராயர்களை தவிர வேறு எந்த பேராயரையும் ஏற்றுக்கொள்ளமாட்டோம் என்றும் உறுதிமொழி எடுத்துக்கொண்டார்கள்.
- *மலபார் திருச்சபை பிளவு:* கடந்த 15 நூற்றாண்டுகளாக ஒன்றாக இருந்த மலபார் கிறிஸ்தவம்; சிரியன் வழிபாட்டுமுறைகளுக்கு திரும்பியவர்கள் என்றும் போர்த்துகீசியர்களின் இலத்தீன் வழிபாட்டுமுறைகளை பின்பற்றினவர்கள் என்றும் இரண்டாக பிரிந்தது.
- *மீண்டும் சுதந்திரம்:* Coonan Cross உறுதிமொழியின் படி தோமா வழி கிறிஸ்தவர்கள் மீண்டும் தங்கள் சுதந்திரம், அடையாளம், கௌரவம் மற்றும் மரியாதைக்குரிய பாரம்பரியத்தை மீட்டெடுத்தார்கள். இவர்கள் போர்த்துகீசிய காலனித்துவம், அரசியல், மேற்கத்திய கிறிஸ்தவ கோட்பாடுகள், பாரம்பரியங்கள் மற்றும் வழிபாட்டு முறைகளை முற்றிலுமாக நிராகரித்துவிட்டார்கள்.

ரோமன் கத்தோலிக்க கர்மேல் மிஷனெரி இயக்கம்





- <u>மீண்டும் சிரியா பேராயர்</u>: வளைந்த சிலுவை உறுதிமொழி *(Coonan Cross Oath)* பற்றிய செய்திகள் மலபார் பகுதி முழுவதும் பரவியதால், தோமா வழி கிறிஸ்தவர்கள் அப்போதைய ரோமன் கத்தோலிக்க பேராயர் கார்சியாவுக்கு பதிலாக, *Archdeacon* ஆக இருந்த தாமஸ் ஜார்ஜ், கிழக்கத்திய-சிரிய-பேராயராக ஏற்றுக்கொண்டார்கள்..

- <u>கத்தோலிக்க பேராயர் கார்சியா</u>: தோமா வழி கிறிஸ்தவர்களை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர கத்தோலிக்க பேராயர் கார்சியா முயன்றும், பலனளிக்கவில்லை. ஆகவே, போப் பாண்டவர் உத்தரவின் பேரில் ரோமன் கத்தோலிக்க கர்மேல் *(Carmelite)* மிஷனெரிகள் மலபாருக்கு கிபி *1656* ல் வந்தார்கள்.

- <u>கார்மலைட்ஸ் மிஷனெரிகள்</u>: இவர்கள், இருவர் இடையே நல்லிணக்கப் பணிகளை மேற்கொண்டார்கள். போர்த்துகீசிய காலனித்துவ அரசியல் வலிமையால், உள்ளூர் மன்னர்களின் ஆதரவை நன்கு பயன்படுத்தினர்கள். இவர்கள் தோமா வழி கிறிஸ்தவர்களின் ஆலயத்திற்க்குள் பலவந்தமாக நுழைந்து, தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தார்கள்.

- <u>இரண்டு திருச்சபைகள்</u>: கர்மேல் மிஷனெரிகளின் முயற்ச்சியினால் கிபி *1662* ல், *56* திருச்சபைகள் *Malankara Catholic Church* தலைமையின்கீழ் வந்தது. இந்த திருச் சபைகளில் ஒடுக்கப்பட்ட இன கிறிஸ்தவர்கள் அதிகமாக இருந்தார்கள். அப்படியே கிழக்கத்திய-சிரிய பேராயர் தாமஸ் தலைமையின்கீழ் *33* தேவாலயங்கள் *Malankara Orthodox Syrian Church* என்றும் பிரிந்தது. இதில் பெரும்பாலும் உயர்சாதி இனத்தை சேர்ந்த தோமா வழி கிறிஸ்தவர்கள் இருந்தார்கள். இவ்வாறு *1, 30,000* கிறிஸ்தவர்கள் கொண்ட மலபார் கிறிஸ்தவத்தில் மூன்றில் இரண்டு பங்கு திருச்சபைகள் மீண்டும் கத்தோலிக்க தலைமையின்கீழ் வந்தது.

போர்த்துகீசியர்களின் வீழ்ச்சியும் டச்சுகாரர்களின் எழுச்சியும்



- <u>ஏகாதிபத்தியத்தின் சரிவு</u>: 16 ஆம் நூற்றாண்டு முழுவதும் போர்த்துகீசியர்கள், செல்வாக்கோடு விளங்கினார்கள். ஆனால் 17 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில், நெதர்லாந்து டச்சுகாரர்களின் வளர்ச்சியால், போர்த்து கீசியர்களின் ஏகாதிபத்தியம் (MONOPOLY) பெரிய சரிவைக் கண்டது.
- <u>டச்சுக்காரர்களின் எழுச்சி</u>: கிபி 1657-63 க்கு இடையில, போர்த்துகீசியர்கள் வசமிருந்த தூத்துக்குடி, நாகப்பட்டினம், கொல்லம், கொச்சி மற்றும் மலபார் போன்ற துறைமுகங்களை டச்சுகாரர்கள் கைப்பற்றினார்கள். கிபி 1663 ல் போர்த்துகீசியர்கள் சரணடைந்ததால், இந்தியாவில் போர்த்துகீசியர்களின் காலனித்துவம் முடிவுக்கு வந்தது.
- <u>போர்த்துகீசியர்களின் வீழ்ச்சி</u>: போர்த்துகீசிய ஆட்சியின் வீழ்ச்சியானது ரோமன் கத்தோலிக்க மிஷனரிகளுக்கு பெரும் பின்னடைவாக இருந்தது, டச்சுக்காரர்கள் சீர்திருத்த திருச்சபையை சேர்ந்தவர்களாக இருந்ததால் ரோமன் கத்தோலிக்கத்தை மிகவும் கடுமையாக எதிர்த்தார்கள். இந்நிலையில் டச்சுகாரர்கள் முதலில் ரோமன் கத்தோலிக்க மிஷனெரிகளை கேரளாவிலிருந்து வெளியேற்றினார்கள்.
- <u>டச்சுகாரர்களின் காலனித்துவமும் நற்செய்திபணியும்</u>: இந்தியாவில் கிறிஸ்தவத்தை பரப்புவதில் டச்சுக்காரர்களுக்கு விருப்பமில்லாமல் இருந்தது. ஏனெனில் நற்செய்திபணி செய்தல், மதமாற்றுதல், திருச்சபைகள் நிலைநாட்டுதல் ஆகியவை அரசியல் ரீதியாக, பொருளாதார ரீதியாக லாபகரமானதாக இருக்காது என்று கருதினார்கள். டச்சுகாரர்களின் முக்கியமான நோக்கமே வியாபாரம் செய்வதும் பணம் சம்பாதிப்பதுமாகவே இருந்தது. டச்சுகாரர்கள் இந்தியாவில் சுமார் 50 ஆண்டுகள் ஆதிக்கம் செலுத்தினார்கள்.

இந்தியாவில் கிறிஸ்தவ சமூகங்கள்







வடமேற்கு இந்தியா: இந்தியாவில் கிறிஸ்தவத்தின் வளர்ச்சியானது கேரளா, கோரமண்டல் கடற்கரையோடு (தமிழ்நாடு) நிற்கவில்லை. முதல் நூற்றாண்டிலேயே இந்தியாவின் வடமேற்கு பகுதியில் (ஆப்கானிஸ்தான்) கொண்டபோரஸ் மன்னரின் சமஸ்தானத்திலும் கிறிஸ்தவம் பரவியது. அப்படியே ஜம்மு (லடாக்) மற்றும் காஷ்மீரில் சிரியன் கிறிஸ்தவர்கள் குடியேறி இருந்ததற்கு, கல்வெட்டுகள் சாட்சியம் அளிக்கின்றன.

வட இந்தியா: கிபி 6 ம் நூற்றாண்டில் கிறிஸ்தவ வரலாற்று ஆசிரியர் காஸ்மோஸ் (Cosmos) பம்பாய், மலபார் (கேரளா) இலங்கையில் கிறிஸ்தவர்கள் வாழ்ந்தற்கு சான்றளிக்கிறார்.

மத்திய இந்தியா (Central India): கிபி 13 ம் நூற்றாண்டில் மார்கோ போலோ (1285 கிபி), மத்திய இந்தியாவில் இருந்த மூன்று பெரிய சமஸ்தான ஆட்சியாளர்கள் கிறிஸ்தவர்கள் என்று குறிப்பிட்டுள்ளார். சிரியன் கிறிஸ்தவர்கள் சமூகங்கள் இந்தியாவின் மேற்கு கடற்கரையில், கோவா (பஸ்ஸீன், பார்டெஸ், சால்செட்), மகாராஷ்டிரா (சாவ்ல், தானே, பாந்த்ரா, நாலா சோபாரா), குஜராத் (பருச்) சிந்து (பாகிஸ்தான்) இடங்களில் பரவி இருந்ததற்கு சான்றுகள் உள்ளது.

கிறிஸ்தவமயமாக்கல்(Christianization): கிபி 16 ம் நூற்றாண்டில் கர்நாடகா (மங்களூர்) மற்றும் ஆந்திரா (மசூலிப்பட்டணம்), மகாராஷ்டிரா (பஸ்ஸீன், பம்பாய்), குஜராத் (சாவ்ல், டாமன், டையூ, சூரத்), ஒடிசா (பலசூர், பிப்ளி), வங்காளம் (டாக்கா, ஹூக்லி) போன்ற பகுதிகளிலும் போர்ச்சுகீசியர்களின் மூலம் கிறிஸ்தவம் பரவியது. கிபி 17ஆம் நூற்றாண்டின் இறுதியில் இந்தியாவில் சுமார் 7,50,000 பேர் கிறிஸ்தவர்களாக இருந்தார்கள் என்று சரித்திர குறிப்புகள் கூறுகின்றன.

Conclusion / முடிவுரை





- *<u>இந்தியாவில் ஆரம்பகால கிறிஸ்தவம்</u>: கிறிஸ்தவம் ஐரோப்பாவில் பரவுவதற்கு முன்பாகவே, முதல் நூற்றாண்டிலேயே கிறிஸ்தவம் தென்னிந்தியாவிற்கு வந்து விட்டது. இந்திய திருச்சபையின் வரலாற்றை, எந்த ஒரு இந்திய வரலாற்று ஆசிரியரும் ஆரம்பமானது முதல் எழுதவில்லை. எவ்வாறாயினும், இந்தியாவில் முதல் நூற்றாண்டிலேயே சுமார் 30 இலட்சம் கிறிஸ்தவர்கள் இருந்தார்கள் என்று சென்னையிலுள்ள மைலாப்பூரின் ராமகிருஷ்ண மடம், வெளியிட்ட சுவாமி விவேகானந்தரின் ஞான தீபம் என்ற புத்தகத்தில் 409 ம் பக்கத்தில் பார்க்கும்போது பெரிய கிறிஸ்தவ சமூகம் இருந்தது என்று நம்புவதற்கு உறுதியான காரணங்கள் உள்ளன.*
- *<u>இந்திய திருச்சபையின் வரலாறு</u>: கிபி 16ஆம் நூற்றாண்டு வரை இந்திய திருச்சபையை வரலாறு பற்றிய குறிப்புகள், இந்தியாவுக்கு வெளியே இருந்து எழுதப்பட்ட இலக்கிய ஆதாரங்கள் மிகக் குறைவாகவே இருக்கின்றன. ஆனால் இந்த காலகட்டங்களில், இந்திய திருச்சபையானது கிழக்கு-சிரியா-பெர்சிய திருச்சபையோடு மட்டுமே தொடர்பில் இருந்தது என்பது உண்மை.*
- *<u>இந்தியாவிற்கு கிறிஸ்தவம்</u>: இந்தியாவில் கிறிஸ்தவமானது முதல் நூற்றாண்டில் அப்போஸ்தலர்களும், நான்காம் நூற்றாண்டில் சீரிய கிறிஸ்தவர்களும், 16 ம் நூற்றாண்டில் இருந்து போர்த்துகீசியர்கள், டச்சுகாரர்கள், பிரெஞ்சுகாரர்கள் இறுதியாக ஆங்கிலேயர்கள் மூலமாகவே கிறிஸ்தவம் பரவியது. இருபதாம் நூற்றாண்டிலிருந்து இந்தியர்களால் கிறிஸ்தவம் பரவிக்கொண்டு இருக்கிறது. இந்தியாவில் அரசியல் ஆட்சி மாற்றங்கள் நடைபெறும்பொழுதெல்லாம் கிறிஸ்தவத்தின் வளர்ச்சி பாதிக்கப்படுகிறது.*

Bibliography

1. Cronin, Vincent, "A Pearl to India" The life of Roberto De Nobili(London: Rupert Hart-Davis, 1959)
2. Firth, C. B., An Introduction to Indian Church history, CSL, No.23(Madras:CLS,1983)
3. Kuriokose, M.K., History of Christianity in INDIA: Surce materials (Madras: CLS, 1982)
4. Mundadan, A.M., History of Christianity in India, Vol. 1 (Bangalore: Dharmaram College, 1967)
5. Perumalil, H.C. & E. R. Hambye, eds., Christianity in India: An ecumenical perspective (Alleppey, 1972)
6. Thekkendath, Joseph, History of Christianity in India, Vol. II (Bangalore, TPI, 1982)
7. Podicpara, Placis J., The Thomas Christians (Bombay: St. Paul's, 1970)
8. Medlycot, A G., India and the Apostle Thomas (London: 1905, P.38)
9. Richter, Julius., A History of Missions in India, trans by Sydeny H. Moore (London: Oliophant and Ferrier, 1908, p.131).
10. Brown, L. W., The Indian Christians of St. Thomas (Cambridge: The University Press, 1956).

THE END.

Produced By: Gamaliel Bible College, Mumbai, India

For Your Feedback: ddavidmumbai@gmail.com

God Bless You to Bless Others…